விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 06 | வெள்ளிக்கிழமை (18.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 61




# சுனாமி நிவாரண பொருட்களுக்கு
# திடீரென சுங்கத் தீர்வை அறவீடு?

## இதனால் துறைமுகத்தில் பொருட்கள் தேக்கம்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ள சர்வதேச நிறுவனங்களின் சுனாமி அனர்த்த நிவாரண உதவிப் பொருட்களுக்கு அரசு திடீரென வரி விதிப்பை மேற்கொண்டுள்ளதாகப் துறைமுகத்திலிருந்து நிவாரணப் பொருட்களை அகற்றுவதில் அந்நிறுவனங்கள் பெரும் சங்கடத்தை எதிர்நோக்கியுள்ளதாகப் தெரிவிக்கப்படுகிறது.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப் படையினர் விடுதியில் ரகளை

(கொழும்பு)

கொழும்பு இரத்மலானையில் விடுதி ஒன்றில் மதுபானம் அருந்திக்கொண்டிருந்த விமானப்படையைச் சேர்ந்த சுமார் 15 பேர் விடுதியை துவம்சம் செய்துள்ளனர்.

இவர்களது அட்டகாசத்தால் விடுதிக்கு சுமார் ஒரு லட்சம் ரூபா வரையான நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொடுத்த பணத்துக்கு கூடுதலாக மது வகைகளை பரிமாறுமாறு இவர்கள் கேட்டதாகவும் இதற்கு மறுப்பு தெரிவித்ததால் கோபமடைந்த படையினர் விடுதியிலிருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலித்தேவனுடன் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவனுக்கும் முக்கிய படையதிகாரிக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இடம்பெற்றதாகக் கூறப்பட்டுள்ளது.

இதற்காக விசேட கொமாண்டோப் படையணியின் பாதுகாப்புடன் புலித்தேவன் கொழும்பிற்கு அழைத்துவரப்பட்டுள்ளதாகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனடாவில் புலிகள் மீதான தடைக்கு எதிராக 69 வீதமானோர் கருத்து

(ரொறன்ரோ)

விடுதலைப் புலிகள் மீது கனடாவில் தடைவிதிக்க வேண்டாம் என கனடிய தொலைக்காட்சி ஒன்று நடத்திய மக்கள் கணிப்பில் 69 சதவீத கனடிய மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஓம்னி தொலைக்காட்சி ஆங்கிலத்தில் 24 மணித்தியாலங்களாக நடத்திய தொலைபேசி கருத்துக் கணிப்பிலேயே இம்முடிபு வெளியிடப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை கனடாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவிக்கவேண்டும் என சமீப நாட்களாக கனடாவில் கருத்துக்கள் வெளியிட்டு வந்த நிலையிலேயே இக் கருத்துக் கணிப்பு வெளிவந்துள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை கனடிய எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சியின் உறுப்பினர் ஒருவர் விடுதலைப் புலிகளை தடைசெய்யுமாறு விடுத்த வேண்டுகோளை கனடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு நிராகரித்தார். விடுதலைப் புலிகளை உள்வாங்கி, இயங்குவதன் மூலமே போர்நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்தி, தொடர்ந்து பேணுவதற்கு உதவும் என நாம் திடமாக நம்புகின்றோம். இந்த நேரத்தில் அவர்களை தடைசெய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்பதையும் நாம் உண்மையாக உணர்கின்றோம், எனக் கனடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு தனது அமைச்சக உபகுழு குழுநிலை விவாதத்தின்போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும்போது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கௌசல்யன் கொலையின் விளைவைத் தடுக்க
## அரசு - புலிகளின் சந்திப்பிற்கு

## ஐ.நா. செயலரின் கண்டனத்துக்கு இலங்கை அரசு கண்டனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அர

சபைக்கான இலங்கையின் வதி ...ப் பிரதிநிதி பேணாட் குண

# அரசு - புலிகளின் சந்திப்பிற்கு கண்காணிப்புக் குழு ஏற்பாடு!

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் இ. கௌசல்யன் கொலை குறித்து நோர்வே அரசாங்கம் தமது கவலையும் அதிர்ச்சியும் தெரிவித்துள்ளது. கொலையை அடுத்து எழுந்துள்ள பதற்றத்தை தணிக்க இராணுவ அதிகாரிகளையும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையும் சந்திக்க வைக்க ஏற்பாடுகளை செய்யுமாறு நோர்வே அரசாங்கம் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு தலைவரை கேட்டுள்ளது.

நோர்வே அரசின் வேண்டுகோளையடுத்து யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் படை அதிகாரிகளையும் புலிகள் இயக்க பிரமுகர்களையும் சந்திக்க வைப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தில் படையினரை சந்திக்க திருமலை மாவட்ட யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனிடம் நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேட்டுள்ளனர்.

(ச)

# இலங்கை அரசு கண்டனம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனின் கொலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் வெளியிட்ட கண்டன அறிக்கை தொடர்பாக இலங்கை அரசாங்கம் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபைச் செயலர் கொபி அனானுக்கெதிரான இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்தினை ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி பேணாட் குணதிலக நேற்று ஐக்கிய நாடுகள் சபைத் தலைமையகத்தில் கையளித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அமைப்பானது இலங்கையில் தனிநாடு கோரிப் போராடிவரும் ஒரு அமைப்பொன்றும் உலகின் முக்கிய நாடுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்திருப்பதோடு தமது நாடுகளில் விடுதலைப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர்களை படையில் சேர்ப்பது பற்றி ஐ.நா. தவறான முடிபை எடுக்கக்கூடாது

## சு.ப. தமிழ்ச்செல்வன்

(திருகோணமலை)

உலகில் சிறுவர்களை படையில் சேர்க்கும் பல்வேறு அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகளின் அமைப்பையும் உள்ளடக்குவது பற்றி ஐ.நா. வெளியிட்டிருக்கும் அறிக்கை பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆழ்ந்து கவலை வெளியிட்டுள்ளார்.

யுத்தத்திற்கு ஆட்களை சேர்ப்பது என்ற குற்றச்சாட்டை முற்று முழுதாக மறுக்கிறோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கும் சிறுவர்கள் பற்றி அங்கே இராணுவத்தால் விபரங்கள் திரட்டப்படுகின்றன. அந்தச் சூழ்நிலையில் பெற்றோர்கள் தங்களது தற்காப்புக் கருதி தமது பிள்ளைகள் கடத்தப்படுவதாக - பலாத்காரமாக பிடிக்கப்படுவதாக குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொது அமைப்புக்கள் நேற்று மாபெரும் கண்டனப் பேரணி

(யாழ்ப்பாணம்)



யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் இணைந்து நேற்று மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளன. யாழ். மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியம், தீவக பொது அமைப்புக்கள் ஒன்றியம், யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், சுழிபுரம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ். மாவட்ட நலன்புரி நிலையங்களின் சமாசம், யாழ். மாவட்ட வெண்மை வாணிபர் சங்கம், வலிவடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஆகியன இணைந்தே இக் கண்டனப் பேரணியை நடத்தின.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பொகவந்தலாவை நகரில் பாரிய தீவிபத்து
# 47 கடைகள் 4 வீடுகள் தீயில் எரிந்து நாசம்

பொகவந்தலாவை நகரில் நேற்றுமுன்தினம் அதிகாலை ஏற்பட்ட பாரிய தீவிபத்துக் காரணமாக 47 வர்த்தக நிலையங்களும் 4 வீடுகளும் முற்றாக எரிந்து சாமபலானதுடன் அதிர்ச்சி காரணமாக ஒருவர் மரணமானார்.



நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் பொகவந்தலாவை செல்வகந்தை வீதியிலுள்ள மீன்கடை ஒன்றில் திடீரென த ஏற்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து ஏனைய கடைகளுககும் தீ பரவத் தொடங்கியதாகவும் தெரியவருகிறது.

'தீ' திடீரென கட்டுக்கடங்காமல் பரவியதை அடுத்து நகரின் செல்வகந்தை வீதியின் இரு மருங்கிலுமுள்ள அனைத்து கடைகளும் எரிந்து சாம்பலாகியுள்ளன.

இதனால் பலகோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் கருகி நாசமடைந்துள்ளன.

தீ விபத்துக்கான காரணம் என்ன என்று உடன் தெரியாத போதும் மின்சார ஒழுக்குக் காரணமாக இத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். திடீரென தீ கடைகளுக்குள் பரவத் தொடங்கியதையடுத்து கடைகளில் தங்கியிருந்த கடை ஊழியர்கள் அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேறி விட்டனர்.

இதேவேளை, வர்த்தக நிறுவனமொன்றில் உறங்கிக் கொண்டிருந்த நபரொருவர் தீ விபத்தையடுத்து அங்கிருந்து வெளியேறியபோதும் அதிர்ச்சி காரணமாக ஏற்பட்ட மாரடைப்பினால் மரணமடைந்ததாகத் தெரியவருகிறது.

இச் சம்பவத்தில் கடைகளில தங்கியிருந்த ஊழியர்கள் சிலருக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளன. நேற்று அதிகாலை தீ பரவியதைத் தொடர்ந்து அதனை உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் போனதாகவும் பின்னர் கண்டி மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் வரவழைக்கப்பட்டே தீயை அணைக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்காரணமாக நேற்று அதிகாலை 2.30 மணிக்கு ஏற்பட்ட தீ நண்பகல் 12 மணியளவிலேயே கட்டுப்பாடடுக்குள் கொண்டுவரப்பட்டது. தீ வேகமாக பரவியதைத் தொடரந்து அருகிலுள்ள ஹட்டன் நகரசபை மற்றும் நுவரெலியா மாநகரசபை என்பவற்றுக்கு உதவிகோரி அழைப்பு விடுத்த போதிலும் உடனடியாக உதவிகளெதுவும் கிடைக்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் பொகவந்தலாவை நகருக்கு அருகிலுள்ள செல்வகந்தை, கொட்டியாகலை, ஆரியபுர, சிறிபுர ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து நீரூற்றி தீயை அணைக்கப் போராடினர். இத் தீவிபத்து காரணமாக பொகவந்தலாவையைச் சேர்ந்த 50 இற்கும் மேலான வர்த்தகர்கள் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இத் தீவிபத்தைத் தொடர்ந்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்குமுகமாக விசேட கூட்டமொன்று பொகவந்தலாவையில் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் மத்திய மாகாண அமைச்சர இராதாகிருஷ்ணன் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகதீஸ்வரன், நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் ரத்னாயக்க, நுவரெலிய பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் டயிள்யூ. ஜி.ஆரயரட்ண, ஹட்டன் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சிசில் பெரேரா மற்றும் பொலிஸ் அதிகாரிகள, அம்பகமுவை பிரதேச சபைத் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக கூட்டத்தின் போது பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தமக்கு ஏற்பட்டுள்ள பொருளிழப்புக் குறித்து பொலிஸாருக்கும் கிராம சேவகருக்கும் அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். மேலும் பாதிக்கபடடவர்களுக்கு உலர் உணவுகளை வழங்குவதறகும் மத்திய மாகாண சமூக சேவைகள் அமைச்சின் மூலமாக பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா நஷ்ட ஈடாக வழங்குவதற்கும் உறுதியளிக்கப்பட்டது. (ப)

## அதிகமான விபத்துக்கள் இடம்பெறும் நாடு இலங்கை

(கொழும்பு)

மிக அதிகமாக விபத்துக்கள இடம்பெறும் நாடாக இலங்கை விளங்குகின்றது.

பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ இது தொடர்பாகத் தெரிவிக்கும்போது,

நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் அரை மணித்தியாலயத்தற்கு ஒருவர் விபத்துக்கு ஆளாகின்றார் எனத் தெரிவித்தார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தல் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வாகனப் போக்குவரத்து முகாமைத்துவத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போதே பொலிஸ்மா அதிபர் இத்தகவலை வெளியிட்டார்.

குற்றச் செயல்கள் தொடர்பான கோவைகளில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தவறான முறையில் தகவல்களைப் பதிவு செய்தால் தவறிழைக்கும் வாகனச் சொந்தக்காரர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பது சிரமமாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கபடுமெனவும் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை விடுத்தார்.

மதுபோதையில் வாகனங்களை செலுத்தும் வாகனச் சாரதிகளைக் கண்டுபிடிக்க பொலிஸார் ஆரம்பித்ததிட்டம் சிறந்த முறையில் பயனளித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-7)

## இராசி பலன்

**18.01.2005**
**(மாசி 6 வெள்ளிக்கிழமை)**
**தசமி பின்னிரவு 01.47 மணிவரை**
**மிருக சீரிடம் பின்னிரவு 02.25 மணி வரை**
**இராகுகாலம் 11.02 -12.32 மணிவரை**
**சுபநேரம் 06.32 - 08.02 மணிவரை**

**மேடம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர் சந்திப்பு, போசன சுகம், தெய்வ தரிசனம்.

**இடபம்** கோபப்படுதல், வீண் செலவு, எடுத்த கருமங்கள் தாமதமாகும், உறவினர் வெறுப்பு.

**மிதுனம்** தெய்வ சிந்தை, பெரியோரால் மதிக்கப்படுதல், நல்ல முயற்சி, போசன சுகம்.

**கடகம்** உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், பிரயாணம், வீண்பகை.

**சிங்கம்** தொழில் நன்மை, உறவினர் வருகை, தெய்வ தரிசனம், கீர்த்தி.

**கன்னி** நண்பர்கள் உதவி, தொழில் மேன்மை, காரிய அனுகூலம், தெய்வசிந்தை.

**துலாம்** புதிய முயற்சி, பிதா சிந்தை, கட்டுப்பாடு, வீண்பயம்.

**விருச்சிகம்** காரிய தடங்கல், வீண் பகை, போசன சுகம், பணக் குறைவு.

**தனுசு** கௌரவமான நிலை, பணவருவாய், காரிய அனுகூலம், தெய்வதரிசனம்.

**மகரம்** நண்பர்கள் சந்திப்பு, போசன சுகம், காரிய நன்மை, சுவாரஸ்யம்.

**கும்பம்** வியாபார நன்மை, ஆரோக்கியக் குறைவு, பணக்கட்டுப்பாடு, காரியதாமதம்.

**மீனம்** மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், பணக்கட்டுப்பாடு, தெய்வ சிந்தை.

பழைய நேரப்பழகணிப்பிடப்பட்டது - வளவன்

## ஐ.ம.சுதந்திரக் கூட்டமைப்பு ஒருபோதும் சோர்வடையாது

### என்கிறார் அமைச்சர் மங்கள

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஒருபோதும் சோர்வடையாது என்று அரசாங்கத்தின் ஊடகப் பேசசாளர் மங்கள சமரவீர நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக அரசாங்கத்துக்குள் இடம்பெற்றுவரும் முறுகல் நிலை தொடர்பில் மங்கள சமரவீர அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், அரசாங்கம் கவிழ்ந்து விடும என்று பலர் எண்ணி வருவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் மங்கள சமரவீர அவ்வாறான சூழல் ஒருபோதும் ஏற்படாது என்று தான் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் தமது கூட்டமைப்புக்கு வழங்கிய ஆணையினை ஒரு போதும் மீறப்போவதில்லை என்றும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வரை தொடர்ந்தும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை தமது கூட்டணி முன்னெடுக்கும் என்றும் மங்கள சமரவீர மேலும் உறுதியளித்துள்ளார். (க-9)

### நேபாளத்தில் இடம் பெறும் சர்வாதிகாரப் போக்கிற்கு

## வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகம் கடும் கண்டனம்

(கொழும்பு)

ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட மன்னர் கஜேந்திரா தலைமையிலான நேபாள அரசைக் கலைத்து அவர் உட்பட அரசியல்வாதிகள் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் சிறைவைக்கப்பட்டுள்ள சம்பவத்தைக் கண்டித்துள்ள வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம், அரசியல் கைதிகளையும் மனித உரிமை ஆர்வலர்களையும் உடன் விடுவிக்குமாறு கோரியுள்ளது.

நேபாளத்தில் தற்போது இடம்பெற்றுவரும் மனி உரிமை மீறல் சம்பவங்களை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக கிளிநொச்சியிலுள்ள வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலக தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமை பாதுகாப்பு நியமங்களுக்கு மீறும் வகையில் நேபாளத்தில் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறான சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட சில அரசியல் கைதிகள் பின்னர் விடுவிக்கப்பட்டுள் போதும் கைதுசெய்யப்பட்ட சகலரும் அவ்வாறு விடுவிக்கப்படவேண்டும் என்றும் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தரப்பினரின் பக்கம் வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## சகல வைத்தியசாலைகளும் நவீன மயப்படுத்தப்படவுள்ளன

(கொழும்பு)

நாட்டின் சகல ஆதார வைத்தியசாலைகளும் எந்தவொரு நோயையும் கையாளும் வகையில் நவீன மயப்படுத்தப்படவிருக்கின்றன என்றும் இதற்குத் தேவையான நிதியை அரசு வழங்குமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சுகாதார அமைச்சின முன்னேற்ற மீளாய்வுக் கூடடத்திலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள், பிராந்திய சேவை நிலையங்கள் தொடர்பாக இக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா உரையாற்றும் போது,

பாதிக்கப்பட்ட சகல சுகாதார நிறுவனங்களும் திருத்தி அமைககப்படுவதாகக் கூறினார்.

இதேவேளை, காலியிலுள்ள ஹரகப்பிட்டிய வைத்தியசாலையை விஸ்தரிக்க நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியொன்றைப் பெற்றுக் கொடுக்குமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பணித்தார்.

சகல மாகாண வைத்தியசாலைகளிலும் இருதய நோய், சிறுநீரகநோய் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கக் கூடிய வகையில் விடுதிகள் நிறுவுவது தொடர்பாகவும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளை, விசேட திட்டத்திற்கமைய ஆரம்பிக்கப்படவுள்ள பாடசாலை சுகாதார சேவை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

இத்திட்டத்தை அமுலாக்குவதற்கு மருத்துவ சுகாதார உத்தியோகத்தர்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்படும். தரமான திரிபோஷ சத்துணவைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி சுகாதார அமைச்சரைக் கேட்டுக் கொண்டார். (க-7)

## ஆசிரியர் மீது தாக்குதல்

(புங்குடுதீவு)

ஆசிரியர் ஒருவர் பெற்றோர்களால் தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நாரந்தனை றோமன் கத்தோலிகக்த் தமிழ் கலவன் பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகத் தாக்குதலுக்கு இலக்கான ஆசிரியரால் தீவக வலய தமிழர்ஆசிரியர் சங்கத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (பு-126)

# செட்டித்தெரு ஒழுங்கையில் கடை உடைத்துத் திருடப்பட்டது

## மேலும் பல பகுதிகளிலும் திருட்டு அதிகரிப்பு

(கோண்டாவில்)

நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் புதிதாக திறக்கப்பட்ட கடை ஒன்று கடந்த 15ஆம் திகதி திருட்டுப் போயுள்ளது.

இக்கடை இரவுவேளை உடைக்கப்பட்டு திருடப்பட்டதாகவும் இங்கே விலை உயர்ந்த பால்மா வகைகள், சிகரட் பண்டல்கள், சீன வெடி பக்கட்டுக்கள் போன்ற பல பொருட்கள் திருடப்பட்டு உள்ளதாகவும் தெரியவருகின்றது. இதன் பெறுமதி சுமார் இரண்டு லட்சத திற்கு மேல் என தெரியவருகின்றது.

கடையின் முன்பகுதி கதவு உடைக்கப்ப்ட்டே களவு இடம் பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இவ்வாறிருக்க கோண்டாவில், திருநெல்வேலி உரும்பிராய் கல்வியங்காடு, கோப்பாய், நீர்வேலி போன்ற பகுதிகளில் சில காலமாக தணிநது இருந்த திருட்டுச்சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளமையால் அப்பகுதி மக்கள் மத்தியின் அச்சம் காணப்படுகின்றது.

பகல் வேளைகளில் மோட்டா சைக்கிளில் வந்து நகைகளை அறுத்துகொண்டு தப்பிச் செல்வது இப்போது கோண்டாவில் பகுதியில் மலிந்துவிட்டது. இதனால் பெண்கள் நடமாட அஞ்சுகின்றனர்.

இதேவேளை இரவு வேளைகளில் கடைகளும் உடைக்கப்பட்டு திருடப்பட்டுவருகின்றனர்.

(ப-130)

# போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் வங்கி உதவியாளர் பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்காக எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்குறிதத பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மககள் வஙகியினால் இப்பரீட்சைக்கென ஏற்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பரீடசைத் திணைக்களத்தினால் உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்படும்.

தகுதி வாய்ந்தவர்கள் எனத தெரிவுசெய்யப்பட்டிருக்கும் பரீட்சார்த்திகளின் பெயர்களை மக்கள்வங்கி இணையத்தளம் www.Peoplesbank.com இல் பார்வையிடமுடியும்.

தாம் பரீட்சை எழுத விரும்பும் மொழிகுறித்து இது வரையில் வங்கிக்குத் தெரிவிக்காதவர்களும் சுனாமிப் பேரிடர் மற்றும் ஏனைய காரணிகளால் இடம்பெயர்ந்திருக்கும் நிலையில் தமது முகவரியில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தவர்களும் நாளை சனிக்கிழமைக்கு முன் தொடர்புகொள்ளுமாறு மக்கள் வங்கி அறிவித்துள்ளது. (ற)

## மத்திய மாகாண கனிஷ்ட

# சுகாதார ஊழியர்கள் உண்ணாவிரத போராட்டம்

(கொழும்பு)

மத்திய மாகாண கனிஷ்ட சுகாதார ஊழியர்களில 300 ற்கு மேற்பட்ட ஊழியர்கள் மாகாண சுகாதார சேவை அலுவலகத்திற்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்பட்ட இந்த ஊழியர்களை சேவையில் இருந்து இடை நிறுத்துவதற்கு மாகாண அதிகாரிகள் எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிராகவே இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இந்த ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுகாதார சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் இணை அமைப்பாளர் ரவிகுமுதேஸ் தெரிவித்தார்.

இதேவேளை இந்த ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொண்ட போதே அவர்களின் சேவைக்காலம் முடிவுறும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண முதல் அமைச்சா சரத் எக்கநாயக்கா தெரிவித்தார்.

இந்த நிலையில் அவர்களது சேவைக்காலத்தை நீடிக்க முடியாது என்றும் முதல் அமைச்சர் தெரிவித்தார்.

(க-9)

## அடுத்த வருடத்திற்குரிய

# சீருடைகள், பாடப்புத்தகங்கள் வருட இறுதிக்குள் வழங்கப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான அடுத்த வருடத்திற்குரிய சீருடைத்துணிகளையும், பாடப் புத்தகங்களையும் இவ்வருட இறுதிக்கு முன்னர் வழங்க வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வியமைச்சரை வலியுறுத்தியுள்ளார்.

கடந்த வருடத்தைப் போன்று இம் முறையும் தேசியப் புடைவை உற்பத்தியாளர்களிடமிருந்ததே சீருடைக்கான துணி வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-4)

# கோரிக்கை

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கில் சேதமடைந்துள்ள முன்பள்ளிகளை மீள்புனர் அமைத்து இயக்க உதவி செய்யுமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் சம்மந்தப்பட்டவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொண்டமனாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான 25 முன்பள்ளிகள் முற்றாக சேதமடைந்துள்ளதோடு 55 முன்பள்ளி ஆசிரியர்களும் பாதிப்படைந்துள்ளனர். (ப-35)

★ ★ ★

(பொன்னாலை)

வட்டு-தெற்கு பேச்சியம்மன் ஆலய குடி தண்ணீர் கிணற்றையும் தங்குமடத்தையும் புனரமைத்துத் தருமாறு அக்கிராமத்திலுள்ள பேச்சியம்பாள் கிராம முன்னேற்றச் சங்கத்தினர் வலி-மேற்குப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பலநூற்றுக் கணக்கான மக்கள் குடிநீருக்காக பாவித்து வரும் இக் கிணறு பல வருடங்களாகத் திருத்தப்படாதிருந்து வருகின்றது.

இதேபோன்று பயிர்ச்செய்கைக் காலங்களின் போது பல விவசாயிகள் இளைப்பாறும் நிழற்குடையாக இருந்துவரும் இத் தங்குமிடத்தையும் புனரமைத்துத் தருமாறு வலி- மேற்குப் பிரதேச செயலரிடம் கோரப்பட்டுள்ளது. (ப-49)

## சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடாத்தப்பட்டு வரும் சமகால அரசியல் கருத்தரங்கின் 18 ஆவது தொடர், உயர்தொழில்நுட்பக் கல்லூரியில் இன்று 10.00 மணிக்கு நடைபெறும்

சீனாவின் அரசியல் முறைமையும் பொருளாதார அற்புதங்களும் என்ற தலைப்பில் இடம் பெறவுள்ளது இதில் யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை விரிவுரையாளர் சந்திரசேகரம் கருததுக்களை வழங்கவுள்ளார். (ப)

## பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும் நாளை சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு கழகப் பண்மனையில் கழகத் தலைவர் இ.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில், யாழ்.மாவடட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் மு.சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும், முன்னாள் வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன மற்றும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப பொறுப்பாளர் அ.சுதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் சகல வர்த்தகர்களையும் தவறாது கல்ந்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் கேட்டுள்ளார். (ந)

## அபராதம் விதிப்பு

(துன்னாலை)

அனுமதிப் பத்திரமின்றி லான்மாஸ்ரர் ஒன்றில் மண் ஏற்றிச்சென்ற வேளை துன்னாலை குடவததைப் பகுதியில் வைத்து நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட லான்மாஸ்டரையும், சாரதியையும் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தி வேளை, குறித்த சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து, 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மணலை பறிமுதல் செய்து பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய கட்டட தேவைகளுக்கு வழங்குமாறு நீதிபதி க.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார். (ந-101)













வெலிகந்த படுகொலைகளைக் கண்டித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கான அரசின் ஒதுக்கீடுகள் புறக்கணிக்கப்பட்டமையைக் கண்டித்தும் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற் பாட்டில் நேற்றைய தினம் யாழ்.நகரில் நடாத்தப்பட்ட பேரணியையும், பேரணியின் இறுதியில் கண்காணிப் புக்குழு அதிகாரியிடம் மகஜர் கையளிக்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஞா.ஐங்கரன்)

## இன்று ஒரு தகவல்

# குதிரை

"குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார் ஒருவர். "குதித்து ஓடத் தெரிந்தால்...அது குதிரை. கனைத்துக கொண்டே சுமக்கத் தெரிந்தால் அது கழுதை" என்று அதறகு வேடிக்கையாக விளக்கம் கொடுத்தார் இன்னொருவர்.

இநத உலகில் சுமப்பதற்கென்றே பிறந்தது கழுதை. ஓடுவதற கென்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்களின் முதுகில் சவாரி செய்வதற்கென்றே பிறந்தவன் மனிதன். அதனால தான் குதிரை முதுகில் ஏறி உட்கார்ந்து கொள்கிறான்... அதுமட்டுமில்லை அது அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டுமென்பதற்காக அதற்குக் கண்ணடக்கம் மாட்டிவிடுகிறான்.

குதிரையின் கண் இருக்கிறதே அது கொஞ்சம் வித்தியாசமானது. ஆடு, மாடுகளுக்கு இருப்பது போலல்லாமல் குதிரைக்கு கண் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக் கண்பார்வை கிடைக்கும். அது ஒரே சமயத்தில் தனது இரண்டு பக்கவாட்டுத் திசைகளிலும் பார்க்கமுடியும்.

அதுமட்டுமல்ல! தனக்குப் பின்னால் என்ன நடக்கின்றது என்பதையும் அவற்றினால் பார்க்க முடியுமாம். நம்மால் அதுபோல பார்க்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அத்துடன் உடலில் மறைக்கப்படும் பின் பகுதியை மட்டும் தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னாலுள்ள ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கும் போது கண்களை முன்பக்கம் திருப்பி பார்வையை குவியப்படுத்தும். அப்போது அதறகு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப் பார்வையும் மறைந்துவிடும். அப்படி அது இரண்டு பார்வையையும் குவித்துப் பார்க்கும்போது அதன் கண்கள் சுமார்1.2 மீற்றருககுக் குறைவான தொலைவிலும் உள்ள பொருட்களைக் குவியப்படுத்த முடியாதாம். அதனால் அதுதான் உண்ணும் இரையைக்கூட பார்ப்பதில்லையாம். வேடிக்கையாகத்தான் உள்ளது.

நாம்கூடப் பல சமயங்களில் அவசரமாக சாப்பிடும் போது சாப்பிடுவது என்னவென்பதை கவனித்தா சாப்பிடுகிறோம்? சாப்பிடுவது என்னவென்பது கைக்கும் வாய்க்கும் தான் வெளிச்சம்! குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டும்போதும், சவாரி செய்யும் போதும் அதன் கண்ணுக்குக் கண்ணடக்கம் என்று சொல்லித் திரைபோட்டு மறைப்பது எதற்கு என்றால் அப்போதுதான் அது போகும் திசையில் மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு ஓடும். பக்கத்திலும் பின்னாலேயும் என்ன நடக்கின்றது என்பதே அதறகுத் தெரியாது.

குதிரைப் பந்தயத்தில் தடைதாண்டும் போட்டி பார்த்திருக்கிறீர்களா? நடுவில் வைத்திருக்கும் தடைகளைத் தாண்டித்தாண்டி குதிரை ஓடும். அப்போதெல்லாம் அது தரையையோ தடையையோ பார்கக முடியாதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கில் தான் தாண்டுமாம். ஆனால் ஒரு விஷயம் எந்த நேரத்தில் கால்களைத் தூக்கி எம்ப வேண்டும் என்பதைக் குதிரை மீது உட்கார்ந்திருப்பவர் சைகை மூலமாகத் தெரிவித்துவிடுகிறார். அதைப் புரிந்துகொண்டு அது தாண்டிவிடும் அவ்வளவுதான். அவர் தவறுதலாக ஏதாவது சைகை காட்டிவிட்டால் குப்புற விழவேண்டியதுதான்.

குதிரையின் கண்களை விட உயர்ந்த மட்டத்திலுள்ள பொருளையும் அதனால் தெளிவாகப் பார்க்க முடியாது. மிக நீண்ட தூரத்திலுள்ள பொருளையும் விவரமாகப பார்க்க முடியாது. அதுமட்டுமல்ல நிறங்களையும் அதனால் கண்டுபிடிக்கமுடியாது.

சரி! இப்படியெல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்குக் கைகொடுப்பது அதன் கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதன் உதவியால் தலையை அவவப் போது தகுந்த நிலைமைக்கு மாற்றித திருப்பி தனது கண்ணில பொருள் தெளிவாகத் தெரிவது போல் செய்துகொள்ளும் .தலையைத் தூக்கினால் தூரதிதில் உள்ளதைப் பார்க்கும். தாழ்த்தினால் அருகில் உள்ளதைப் பார்க்கும்.

கண்ணில் விழித்திரை ஒன்று உண்டல்லவா? அது மற்ற விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்குத் தட்டையாக இருக கும். அதனால் தான் தலையைத் திருப்பி பிம்பம் விழுவது போல செய்து கொள்ளமுடியும். ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இரண்டு பக்கமும் கண்கள் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக் குதிரை தனது தலைக்கு முன்னால் இருப்பதைத் தெளிவாகப்பார்க்க முடியும் அதுதான் உயர் தரமான குதிரை. குதிரைக்கு பழக்கமும், பயிற்சியும் மிக முக்கியம்.

ஒருவர் ஒரு குதிரைக்குப் பயிற்சி கொடுத்துக்கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னால் நின்று கொண்டிருக்கும் இவர் பின்னால் கொஞ்சம் தூரத்தில் இருந்து வேகமாக ஓடிவந்து ஜம்ப் செய்வார். அப்படியே உயரே ஆகாயத்தில் எழும்பி குதிரையின முதுகில் போய் பொத் என்று உட்காருவார். அதே வினாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பிக்கும் அப்படி ஒரு பயிற்சி.

இதைப்பார்த்த ஒரு பெரியவர் இப்படி பொத் என்று அதன் முதுகில் போய் விழுந்தால் குதிரையின் இருப்பு என்ன ஆகும்? உடைந்துவிடாதா? என்றார். இவர் அவற்றைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. கொஞ்சநாள் கழித்து பயிற்சி கொடுத்தவர் அந்தப் பெரியவரை மறுபடியும் பார்த்தார்.

"ஐயா! நீங்கள் சொன்னதுபோலவே இருப்பு உடைந்து விட்டது" என்றார். 'குதிரைக்கா?' என்று கேட்டார் அவர். 'இல்லை... எனக்கு'என்றார் இவர். பார்த்தால் இடுப்பு வளைந்துபோய் இருந்தது. 'எப்படி' என்று கேட்டார் அவர்.

"குதிரைக்கு பயிற்சியெல்லாம் நன்றாகத்தான் கொடுத்தேன் அது முடிந்தபின்பு ஒருமுறை நான் வழக்கம் போல் பின்னாலிருந்து ஓடிவந்து ஸ்டைலாக ஜம்ப் செய்து ஆகாயத்தில் எழும்பி குதிரையின முதுகில் உட்காரப் போனேன். நான் உட்காருவதற்கு முன்பே குதிரை ஓட ஆரம்பித்துவிட்டது. தரையில் உட்கார்ந்து விட்டேன் அதுதான் இப்படி ஆகிவிட்டது' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய கனேடிய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது

(ஒட்டோவா)

**விடுதலைப்புலிகளை கனடா தடைசெய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சியான கன்சவேட்டிவ் கட்சி உறுப்பினரின் வேண்டுகோளை கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெற்றிக்குறு நிராகரித்துள்ளார்.**

அமெரிக்கா, நோர்வே உட்பட பல நாடுகள் விடுதலைபுலிகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இதேபோன்ற நிலைமை கனடாவிலும் நிலவுவதால் இங்கு பல சீர்கேடுகள் நிலவுகின்றன. இதனை அனுமதிக்க வேண்டாம் எனத் தம்மைக் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகளையும் உள்வாங்கி, இயங்குவதன் மூலமே போர் நிறுத்தத்தை மேலும் வலுப்படுத்தி தொடர்ந்து பேணுவதற்கு உதவும் என நாம் திடமாக நம்புகின்றோம்.

இந்த நேரத்தில் அவர்களை தடை செய்வதன் மூலம் எந்தவித பலனும் ஏற்படப்போவதில்லை என்பதையும் நாம் உண்மையாக உணர்கின்றோம் எனக் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பியர் பெறறிக்குறு தனது அமைச்சக உபகுழு குழுநிலை விவாததத்தின் போது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது தெரிவித்துள்ளார்.

2001 செப்டம்பரில் அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் பின் கனடாவிலும் பயங்கரவாதத தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கழ் இதுவரை 35அமைப்புக்கள் பயங்கரவாத அமைபபுகளாக பல்வேறு கட்டங்களாக அறிவிக்கப்பட்டிருநதாலும், விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட அமைபாக கனடாவில் இது வரை அறிவிக்கப்படவில்லை.

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம், விடுதலைப் புலிகளையும் உள்ளடககி 6 தென்னாசிய அமைப்புக்களை தடைசெய்யுமாறு கனேடிய உளவுத்துறை வேணடுகோள் விடுக்க, கனேடிய மந்திரிசபை விடுதலைப் புலிகளை தவிர்த்து ஏனைய அமைப்புக்களையே அப்போது தடைசெய்தது. எனினும் வலதுசாரி போககுடைய கனேடிய எதிர்க்கட்சியான கன்சவேட்டிக் கட்சியும், வலதுசாரி மற்றும் புதிய குடிவரவாளர் எதிர்ப்புப் பத்திரிகைகளும் அவ்வப்போது விடுதலைப்புலிகள் தடை விடயத்தை கனேடிய பாராளுமன்றத்திற்கு உள்ளும் வெளியும் தொடர்ந்தும் எழுப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-4)

# அரச துறைசார் இடமாற்றங்கள்

# மார்ச் முதல் அமுல்செய்யப்படும்

(கொழும்பு)

அரசாங்கத் துறைசார் வருடாந்த் இடமாற்றங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்செய்யப்படவுள்ளது.

இதன பிரகாரம் சுமார் 5ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் இடமாற்றம் பெறுவார்கள் என பொது நிர்வாக அமைப்பின் கூட்டுச் சேவைகளுக்கான பணிப்பாளர் ஜயம்பதி கெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் விருப்பத்திற்கு அமைய தததமது சொந்த ஊர்களிலோ அருகில் உள்ள பிரதேசங்களிலோ வேலை செய்யும் வகையில் இடமாற்றத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரே இடத்தில் 5வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய ஊழியர்கள் ஏற்கனவே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இடமாற்றங்கள் தொடர்பான மேனமுறையீடுகள் பற்றியும் கூடுதலான கவனஞ் செலுததப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

அரசதுறை சார் இடமாற்றங்கள் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அமுல்செய்ய திட்டமிட்டிருந்தாலும் சுனாமி அனர்த்தம் காரணமாக அவற்றை ஒத்திவைப்பது என பொது நிர்வாக அமைச்சு முடிவு செய்துள்ளது.

(க-60)

## அடையாள அட்டைகளை வழங்க

# கிளிநொச்சி, திருமலை மாவட்டங்களில் 19,20 ஆம் திகதிகளில் நடமாடும்சேவை

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு நடமாடும் சேவை மூலம் புதிதாக தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கையை ஆட்பதிவுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிர்வரும் 19,20ஆம் திகதிகளில் இந்நடமாடும் சேவையை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை, பச்சிலைப்பளளி, பூநகரி ஆகிய பகுதிகளிலும் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, திருகோணமலை நகரம், மூதூர் ஆகிய பகுதிகளிலும் இந்த சேவைகள் நடாத்தப்படவுள்ளன.

காணாமல்போன அடையாள அட்டைகளின் இலக்கங்களைச் சரியாகத் தெரிவிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது.

களுத்துறை, காலி, அம்பாறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் கடந்த 12,13ஆம் திகதிகளில் இந்த நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளில் 16ஆயிரம் பேருக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் அழிவுற்ற ஆவணங்களை மீளப் பெறுவதற்கு பல்லாயிரக்கணக்கானோர் விண்ணப்பித்து வருகின்றனர். இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அழிவுற்ற ஆவணங்களைப் பெற விண்ணப்பித்துள்ளனர்.

காலி, அம்பாந்தோட்டை மாவட்டங்களைச் சேர்நதவர்களே அதிகமாக இதற்கு விண்ணப்பித்துள்ளனர். பிறப்புச் சான்றிதழ், மரணச் சான்றிதழ், விவாகச் சானறிதழ்கள் எனபனவும் இதில் அடங்குகின்றன. இதற்கான சான்றிதழ்களை ஒருவார காலத்திற்குள் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ற-8)

## வடமராட்சி மீனவர்களுக்கு

# கியூமெடிக்கா நிறுவனத்தால் மேலும் 50 படகுகள் வழங்கப்படும்

(மருதங்கேணி)

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கியூமெடிக்கா நிறுவனம் மேலும் ஒருதொகுதி படகுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு 1000 படகுகள் வழங்கும் திட்டத்தில் இவ்வாரம் 50 படகுகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி மீனவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு இப்படகுகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒருதொகுதியாக கடந்த வாரம் வைபவ ரீதியாக 15 படகுகள் வழங்கப்பட்டுள்ளன. (ப-35)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி; 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

(துன்னாலை)

சட்டவிரோத கசிப்பு உற்பத்தி செய்த பெண்ணொருவருக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் 70ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த பிரஸ்தாப பெண்ணுக்கு எதிராக பருத்தித்துறை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம், பிரஸ்தாப பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதை யடுத்து இவருக்கு 70 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார்.

அத்துடன், பிரஸ்தாப பெண் அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஒருவருட சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் நீதிபதியின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-101)

# தே.அ.அட்டையை வழங்குவதற்கு அதிகாரிகள் பூரண ஒத்துழைப்பு வழங்குவதில்லையாம்

## ஆட்பதிவுத் திணைக்களம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடற் பேரலையினால் தேசிய அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அவற்றை மீண்டும் வழங்கும் திட்டத்திற்கு அப்பகுதிகளை சேர்ந்த அதிகாரிகள் வழங்கும் உதவி போதுமானது அல்ல என ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் தேசிய அடையாள அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குக் கிராம உத்தியோகத்தர்கள் முதல் மேல்மட்ட அதிகாரிகள வரையிலான சகலரது ஒத்துழைப்பும் அவசியம் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பி.வி. ஆபயகோன் தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

சுனாமியினால் அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் நடமாடும் சேவைகள் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இதன்படி கடந்த 12,13,ஆம் திகதிகளில் களுத்துறை, காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை. ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவைகளில் 16 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இந்த விண்ணப்பங்களை ஆராயும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருவதாகவும் விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்படும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பல போலியானதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் நடமாடும் சேவைகளில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் 3 வாரங்களுக்குள் விநியோகிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவத்தார்.

இதேவேளை சுனாமியினால் அடையாள அட்டைகளை இழந்தவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கும் அடுத்தகட்ட நடவடிக்கை நாளையும், நாளை மறுதினமும் திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளன. (க-9)

# சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க கால அவகாசம்

## யூலை வரை நீடிப்பு

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலும் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்துள்ளவர்கள் அதனை எதிர்வரும் யூலை மாதத்திற்குள் கையளிப்பதற்கு அரசாங்கம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

யூலை மாதத்திற்குப் பின்னரும் ஆயுதங்களை கையளிக்காதவர்களை கைது செய்யப்படவுள்ளதாக பொலீஸ்மா அதிபர் சந்திரா பொனாண்டோ தெரிவித்தார்.

நாடு முழுவதிலும சட்டவிரோதமாக 35ஆயிரம் ஆயுதங்கள உள்ளன. இதனால் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்றுவருகின்றன.

யூலை மாதம் சர்வதேச ஆயுத எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதால் அரசாங்கம் சட்டவிரோத ஆயுதங்களை மீளப் பெற்றுக்கொளவதில் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

சட்டவிரோத ஆயுதங்களைக் கையளிக்காதோர் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மக்கள் பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிபபிடத்தக்கது (க-9)

# கடற்றொழில் அமைச்சுக்கு புதிய செயலர் நியமனம்

(கொழும்பு)

கடற்றொழில் நீரியல் வள அமைச்சின் புதிய செயலாளராக ஜீ. ஜீனதாஸ நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை பொது நிர்வாகசபையின் அதிகாரியான ஜீ.ஜீனதாஸ குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளராகக் கடமையாற்றியவராவார்.

1973ஆம் ஆண்டு இலங்கை பொது நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட ஜீனதாஸ, பிராந்தியக் கட்டுப்பாட்டாளர். உப மாவட்ட செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகிய பதிவிகளையும் வகித்துள்ளார்.

2001, 2002ஆம் ஆண்டுகளில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளராகவும் இவர் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-8)

# சட்டவிரோத மின்பெற்ற 14 பேருக்கு 2 லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதம்

## பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பு

சட்டவிரோதமாக மின்சாரத்தை பயன்படுத்திய 13 பேருக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும் மற்றும் ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தீர்ப்பை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் வழங்கினார்.

பருத்தித்துறை, புலோலி பகுதியை சேர்ந்த சிலோன்மணி கந்தையா, க.சரஸ்வதி, த.நடேசு, விபுஸ்பராணி, ந.செல்லச்சாமி, ச.ஞானேஸ்வரி, த.அன்னபூரணம், கமகாலட்சுமி, க.செல்வராசா, வ.சுதந்திரபோஸ் யோ.விமலாதேவி, சி.சிறிரவீந்திரராசா, சி.சிறிரஞ்சினி, சி.வள்ளிநாயகி, ஆகிய 14 பேரையும் சட்டவிரோத மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலிஸாரின் உதவியுடன் இலங்கை மின்சாரசபையினர் வழககுத் தாக்கல் செய்தனர்.

அனைரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் சட்டவிரோதமாக மின்னைப் பெறப் பயன்படுத்திய உபகரணங்களைப் பறிமுதல் செய்ததுடன் 14 பேருக்கும் 2லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை மின்சாரசபையிடம் மின்சாரத்தைப் பெறுவதற்காகப் பலர் உரியமுறையில் விண்ணப்பித்தும் பல மாதங்களாகத் தமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லையெனவும், தினமும் அலுவலகத்திற்குச் சென்றபோது மின்கம்பம் இல்லை, வயர் இல்லை என்று சாட்டுக்கள் கூறப்படுவதாகவும் பலர் விசனம் தெரிவிக்கின்றனர். (ப-101)

# மத்திய வங்கி ஊடாகவே நிதியுதவி கையளிக்கப்படும்

(கொழும்பு)

அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி அனைத்தும் மத்திய வங்கி ஊடாகவே கையளிக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமிக்குப் பின்னர் 600ற்கும் அதிகமான அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அனுப்பிவைக்கப்படும் நிதி சரியானமுறையில் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

## சூரிய சக்தியில் இயங்கும்

# துளி நீர்ப்பாசன இயந்திரங்கள் யாழ்ப்பாணத்திற்கும் வழங்கப்படும்

(கொழும்பு)

உலர்வலய விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத தீர்க்கும் முகமாக சூரியசக்தியில் இயங்கக்கூடிய துளி நீர்ப்பாசன இயந்திரங்களை பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் உலர் வலயப் பிரதேசங்களுக்கு 10 ஆயிரம் இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் நீர் . வண்விரயமாவது குறைக்கப்படுவதுடன் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் பயன்படுத்தப்படுகிறது.

நுவரெலியா, மாத்தளை. குருநாகல் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளித்த இந் நர்ப்பாசனமுறையை, யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை. வவுனியா, புத்தளம் போன்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக விவசாய அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-60)

# விபத்து

(துன்னாலை)

நீர்வேலிப் பகுதியில் பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர வீட்டோடு மோதியது.

அதில் வந்த சுமார் 40பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்கள். (ப-113)

# மீனின் விலை அதிகரிப்பு

சுனாமி கடல் அனர்த்தத்தின் பின் யாழ்.குடாநாட்டு மக்கள் மீன் உண்பதை தவிர்த்துவந்தனர்.

தற்போது மரக்கறிகளின் விலை சந்தையில் அதிகரித்துக் காணப்படுவதனால் மக்கள் மீண்டும் மீன் உண்பதில் நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனால் மீனின் விலை சந்தையில் அதிகரித்து உள்ளது.

மக்கள் மீனில நாட்டம் கொண்டுள்ளமையாலும் மீன்பிடித்தொழில் முற்றாகப் பாதிபபடைந்துள்ளமையாலும் சிறிய அளவிலேயே மீன் பிடிப்பதாலும் சந்தையில் மீனின் விலை அதிகரித்துக் காணப்படுகின்றது. (ப-130)

# அபிவிருத்தி திட்ட பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

நியாப் II திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்படும் 25 கிராமங்களுக்குப் பொருத்தமான கிராம அபிவிருத்தித்திட்டம், கிராம விவசாய அபிவிருத்தித்திட்டம் மற்றும் கிராம சமூக பொருளாதாரத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 21ஆழ் திகதி காலை 9.00மணிக்கு திருநெல்வேலியிலுள்ள விவசாயப் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்கள் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இப்பயிற்சி வகுப்பில் பிரதேச செயலகங்களின் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர்கள், கிராம அபிவிருத்தி அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், கமநல அபிவிருத்தி பெரும்பாக அலுவலர்கள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-19)

# பாவனைக்குதவாத பாண் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது கொழும்புத்துறை பகுதியிலுள்ள வெதுப்பகம் ஒன்றில் வற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத 80 இறாத்தல் பாணை கைப்பற்றியுள்ளது.

மேற்படி சுகாதாரப் பரிசோதகர்கள் உரிமையாளரின் பூரண சம்மதத்தோடு அவற்றை அழித்துள்ளதோடு விற்பனையாளரையும் எச்சரிக்கை செய்தனர். (ற)

# விபத்தினால் காயம்

வேலைக்குச் சென்றுகொண்டிருந்த வயோதிபர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதால் வயோதிபர் காயமடைந்தார்.

இதில் கணபதி சீனியன் என்பவரே படுகாயம் அடைந்துள்ளார். (ப-113)

# பேரலைகள் விரைந்து செல்லும் பாதைகள் பற்றி அறிவிக்க அனுமதி

(கொழும்பு)

ஆட்கொல்லிப் பேரலைகள் விரைந்து செல்லும் பாதைகள் பற்றிய முக்கிய தகவல்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் உலக சுனாமி எச்சரிக்கைமுறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பெல்ஜிய தலைநகரில் ஒன்றுகூடியுள்ள உலக வானிலை நிபுணர்கள் இந்த விடயத்திற்கு முன்னுரிமையளித்துள்ளார்கள்.

அமெரிக்க தேசிய சமுத்திர காலநிலை நிர்வாக அமைப்பில் தலைவர் வைஸ் அட்மிரல் கொன்றாட் லொடின் பாச்சர் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்,

60 நாடுகள், 40கக்கு மேற்பட்ட நிறுவனங்கள், சுனாமிப் பேரலைகள் விரைந்துசெல்லும் பாதைகள் பற்றிய முக்கிய தகவல்களை உடனுக்குடன் பகிர்ந்துகொள்ள இணங்கியிருக்கின்றன.

ஏற்கனவே நிலைநாட்டப்பட்டிருக்கும் காலநிலை உணர்திறன் கருவிகள் ஊடாக இந்தப் பணி நிறைவேற்றப்படும்.

டிசம்பர் 26ஆம் திகதி நிகழ்ந்த பூகம்பத்தையும் அதனைத்தொடர்ந்து எழுந்த பேரலைகளையும் இந்த உணர்கருவிகள் கண்டுபிடித்தன.

ஆனால் இதுதொடர்பான தகவல்கள் அவை சம்பந்தப்பட்ட நாடுகளை எட்டவில்லை என்றார். (க-60)

# நினைவில்....

(...ஆம் பக்கத் தொடர்ச்சி)

"பாதர், நான் நாலு வருடமாக ஒருவரை காதலித்தேன். எனக்குத் தற்போது வேறொருவருடன் திருமணம் நடக்கப்போகிறது" என்று கூறி அதற்கு மேல் கூறமுடியாமல் கொண்டு வந்த அழைப்பிதழைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அவள் சென்றபின் 'அபிராமி எங்கிருந்தாலும் நலமாக வாழவேண்டும்' என்று மனதார வாழ்த்தினார் பாதர்.

அபிராமி -ஆகாஷ் கல்யாணம் பெரியோர் ஆசீர்வாதத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அவன் அவளோடு கொண்ட
காதல் 4 வருடத்தில் பேசிய
போது மதம் என்ற பெயரில்
பிரிக்கப்பட்டது ~ அவள் அவன்
மீது கொண்ட காதல் நான்கு
வருடத்தில் பேசியபோது அவன்
நினைவில் இருந்து நீங்கிவிட்டது
பிரிக்கப்பட்ட காதலாக
இருந்தபோதும் நினைவில் மட்டும்
எப்போதும் வாழ்ந்திருக்கும்
அழியாத ~ உயிர் முடியாத~
ஆயுள் மறக்காத நினைவு
இந்தக் காதலுக்கு
என்றும் இருக்கும்.

(யாவும் கற்பனை)


# 6 கால் அதிசய தவளை



சீனாவின் குவாட்டா பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் தவளை உணவு சமைப்பதற்காக சந்தையில் வாங்கிவந்த ஒரு தவளைக்கு 6 கால்கள் காணப்பட்டன.

பாம்பு, பல்லி, தவளை உணவுவகைகள் சீனாவில் பிரசித்தம். சில தினங்களுக்கு முன்னர் சீனாவின் குவாட்டாப் பகுதியில் உள்ள ஒரு ஹோட்டலில் தவளை உணவு சமைப்பதற்காகச் சந்தையில் வாங்கிவந்த தவளைக்கு 6 கால்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதனால் அந்தத் தவளையைக் கொல்லாமல் பொதுமக்களின் பார்வைக்காக வைத்துள்ளனர்.

# பனிக்கட்டியால் கட்டப்பட்ட சொகுசு ஹோட்டல்



ஆஸ்திரியா நாட்டில் தற்போது கடும்குளிர் நிலவுகிறது. இதைச் சாதகமாகப் பயன்படுத்தி அந்நாட்டின் ஸ்கூல்டென் நகர மலைப்பிரதேசத்தில் 4 இளைஞர்கள் முழுக்க முழுக்கப் பனிக்கட்டியிலான சொகுசு ஹோட்டலொன்றைக் கட்டியுள்ளனர்.

இந்தக் ஹோட்டலில் மது பார், சமையலறை, தங்கும் அறை உட்பட அனைத்து வசதிகளும் உள்ளன. மேசை, இருக்கை, கட்டில் உட்பட அனைத்துப் பொருட்களும் பனிக்கட்டியினாலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. ஹோட்டலுக்கு வரும் வாடிக்கையாளர்கள் குளிரைத் தாங்கிக் கொள்வதற்காக அவர்களுக்குச் சிறப்புக் கம்பளி உடைகள் வழங்கப்படுகின்றன.

# ஐயங்கள் ஆயிரம்

## சூரியனின் ஆற்றல்

சூரியனின் வெப்பம் குறையாமல் இருப்பதன் காரணம் என்ன தெரியுமா?

ஒவ்வொரு நொடியும், பல மில்லியன் தொன் ஹைட்ரஜன் எரிபொருளைச் சூரியன் எரித்துக்கொண்டு வருகிறது. இருந்தும் மேலும் 200 கோடி ஆண்டுகளுக்குக் கொஞ்சமும் குறைவில்லாமல் எரிவதற்குத் தேவையான ஹைட்ரஜன் எரிபொருள் அதனிடம் உள்ளது.

நாமும் நமக்கு அடுத்துவரப்போகும் ஆயிரமாயிரம் சந்ததிகளுக்கும் தேவையான அளவு வெப்பமும், ஒளியும் தரும் அளவுக்குச் சூரியனிடம் ஆற்றல் உள்ளது.


## இரவு – பகல் ஏற்படுவது எவ்வாறு?

சூரியன் எனும் விளக்கு முன்பாக இருந்தபடி பூமிப்பந்து சுழல்வதால் இரவு பகல் தோன்றுகிறது.

ஆகாயத்துக்கென்று ஒளியே கிடையாது. அது கும்மிருட்டில் மூழ்கிக் கிடக்கிறது. நள்ளிரவில் ஒளிரும் கிறிஸ்துமஸ் பல்புகள் மாதிரி சூரியன்கள் (நட்சத்திரங்கள் யாவும் தனித்தனிச் சூரியன்களே) இந்த ஆகாயத்தில் ஜொலித்துக்கொண்டிருக்கின்றன. பல்புகளைச் சுற்றிவரும் விட்டில் பூச்சிகள போல இந்தச் சூரியன்களைச் சுற்றியபடி கோள்கள் உள்ளன. பல்பினைச் சுற்றி வருவதோடு தன்னைத்தானேயும் சுற்றிக் கொள்கின்றன.

ஒரு அறையைக் கும்மிருட்டாக்குங்கள். நடுவில் ஒரே ஒரு விளக்கு எரியட்டும். கொஞ்சம் தள்ளி ஒரு பூசணிக்காயை வைத்துவிட்டு அதன் காம்பைப் பிடித்துச் சுழற்றுங்கள். அதன் ஒரு பாதியில் விளக்கொளி படும். அடுத்தபாதி இருட்டாக இருக்கும்.


பூசணிக்காய் மீது ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரு எறும்புக்கு காய் சுற்றச் சுற்ற கொஞ்சநேரம் வெளிச்சமாகவும், அடுத்து இருட்டாகவும் மீண்டும் வெளிச்சமாகவும் தெரியும். இப்படித்தான் பூமியின் மீது ஒட்டிக் கொண்டிருக்கும் நமக்கும் இரவும் பகலும் தினமும் நிகழ்கிறது.



பிரான்ஸில் கேன்ஸ் நகரில் அண்மையில் நடைபெற்ற மின்னனு சாதனங்களுக்கான உலக கண்காட்சியில் இடம்பெற்றுள்ள எல்ஜி எலக்ரோனிக்ஸ் நிறுவனத்தின் புதிய எஸ்வி 360 கேம் போன்தான் இப் பெண்மணியின் கைகளில் உள்ளது.

எம்பி 3யில் பதிவு செய்யப்பட்ட பாடல்களையும் இதன்மூலம் கேட்கமுடியும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-47



அனுப்ப வேண்டிய முகவரி-

குறுக்கெழுத்துப் போட்டி இல – 47
'வலம்புரி - சங்குநாதம்'
இல:- 15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

முழுப் பெயர் :- ..............................

முகவரி :- ..............................
..............................
..............................

இங்கே வெட்டுக ------------------------ ✂

மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

### இடமிருந்து வலம்

(1)கடிதம் – இதனை இப்படியுமழைப்பர். (4)குழந்தையின் ஆரம்பப் பேச்சு. (5)இதனைக் கண்ணென மதித்து செயலாற்றவேண்டும். (6)ஒரு உலோகம். (7)ஐம்பூதங்களிலொன்று.

### மேலிருந்து கீழ்

(1)வாழ்வில் ஒரு திருநாள். (2)நீர்வாழ் உயிரினங்களிலொன்று. (3)இதனை அழுக்காறு என்றுங் கூறுவர். (5)ஒட்டகம் – இதனை இப்படியுமழைப்பர். (6)மனிதன் இதனைக் கட்டுப்படுத்துவது நல்லது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 45இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1.பச்சோந்தி 5.சிங்களம் 6.இரை 7.சோலை 9.வதனம் 10.புவி 11.புறா

### மேலிருந்து கீழ்

1.பட்சி 2.சோளகம் 3.திடம் 4.வல்லாரை 6.இரும்பு 7.சோம்பு 8.பாதம்

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு | :- | A.தயாபரன் சரவணை மேற்கு, வேலணை. |
| இரண்டாம் பரிசு | :- | பெ.ஸ்ரீகாந்தன் சங்கத்தானை, சாவகச்சேரி. |
| மூன்றாம் பரிசு | :- | செ.இராசதேவி கோப்பாய் தெற்கு, கோப்பாய். |

## போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

யோ.யோகராசா, சங்கானை. பு.மதுஷா, சுன்னாகம். K.T.S.சயந்தன், வட்டுக்கோட்டை. த.யோகராசா, சாவகச்சேரி. வை.சிந்துஜன், சாவகச்சேரி. P.செல்வராணி, வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. சி.ஜெயந்தி, சங்கானை. V.C.சோதிநாதன், பண்ணாகம். கே.அரசேஸ்வரன், நல்லூர். செ.சுதர்சன், நயினாதீவு. து.துவாரகன், சுன்னாகம். சி.இளங்கோ, உடுவில். வி.செல்வநாயகம், புத்தூர். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. இ.வசந்தினி, ஏழாலை. க.சங்கரலிங்கம், யாழ்ப்பாணம். மு.வித்தியானந்தன், சுண்டுக்குளி. மு.பிறேமினி, மானிப்பாய். சி.ஜெயருக்ஷன், சுன்னாகம். அ.உதயசிறி, ஆனைக்கோட்டை. வி.இளங்கோ, கோப்பாய்.

# நினைவில் மட்டும்...

"பாதர்... பாதர்..." என்று கூப்பிட்ட சத்தம்கேட்டு சீனுவின் ஜெபம் கலைந்தது. ஏதோ ரொம்பநாளா அவரோடு வாழ்ந்த அந்தக் குரல் சத்தம் கேட்டு திரும்பிப்பார்த்தார்.

அபிராமி கைகளில் அழைப்பிதழுடன் நின்றிருந்தாள். இதைப் பார்த்த சீனுவின் நினைவு 12 வருடங்களுக்கு முன் சென்றது.

அன்று ஜனவரி 27ஆம் திகதி. சீனுவின் நண்பன் பிரபா "டேய் சீனு, இண்டைக்கு நான் எங்கட குடும்ப நண்பர் சிறி அங்கிள் வீட்டுக்குப் போறேன். நீயும் வாறியா?" என்று கேட்க,

அதற்கு சீனு "அதற்கென்ன வந்தாப்போச்சு" என்று கூறியபடி பிரபாவின் மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறினான். அங்கிள் வீடு வந்ததும் இருவரும் உள்ளே சென்றனர்.

அங்கேதான் சீனுவின் வாழ்வில் காதல் மலர்ந்தது. அந்த நாளை அவனால் மறக்க முடியாது. மேசையில் இருந்த போட்டோ பிரேமில் அவளைப் பார்த்த அவன் சற்றுநேரம் தன்மை மறந்துவிட "டேய் சீனு" என்று பிரபாவின் சத்தம் கேட்டு தன்னிலைக்கு வந்தான்.

"சீனு, பார்த்து... விழுந்திடப்போறாய்" என்று பிரபா கிண்டலடித்தான். சீனு புன்னகைத்தான். அங்கிளும் அன்ரியும் இருவரையும் வரவேற்று உபசரித்தனர். இருவரும் ரீ குடித்துவிட்டு அங்கிருந்து விடைபெற்றனர். அன்றிலிருந்து பிரபா சிறி அங்கிள் வீட்டுக்குப் போவதென்றால் சீனுவும் கிளம்பிவிடுவான்.

இவ்வாறாக ஒருமுறை பிரபாவும், சீனுவும் சிறி அங்கிள் வீட்டுக்குப் போனார்கள். அங்கிளும் அன்ரியும் இருவருடனும் கதைத்துக்கொண்டிருக்கையில் "அன்ரி, அபிராமி இன்னும் கோயிலுக்கு போகவில்லையா" என்று பீரபா கேட்க, "இதோ" என்றபடி அவன் எதிரில் அந்த அழகிய முகம் தென்பட்டது.

சீனு ஒரு நிமிடம் மெய் சிலிர்த்துவிட்டான். அன்று தான் அவன் அவளை நேரில் பார்த்தான். அவனது கற்பனை சிறகடித்துப் பறந்தது. கைகளில் அர்ச்சனைத்தட்டை ஏந்தியபடி இருவரையும் பார்த்து புன்முறுவலுடன் அவ்விடத்தைவிட்டு அகன்றாள் அபிராமி.

இவ்வாறாக அபிராமியின் நினைவு சீனுவின் மனதில் காதலாக மலர்ந்து அவனை அறியாமலே அவன் அவளோடு வாழ்கின்றான். சம்மதமோ சலனமோ ஏற்படாமல் அவனது காதல் இரண்டு வருடங்களைக் கடந்தது. அப்போதுதான் அவனுக்கு தன்னை அபிராமிக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்று தோன்றியது. சீனு அபிராமிக்கு ஒரு கடிதம் எழுதினான். அதில்,

'உன்னோடு இரண்டு வருடங்களாக உன்னைக் கேட்காமலே வாழ்கின்றேன். நான் யார் என்று நீயே கண்டுபிடி' என்று எழுதினான். அத்துடன் எனது சொந்த இடம் யாழ்ப்பாணம், திருநெல்வேலி என்க் குறிப்பிட்டான்.

கடிதத்தைப் பார்த்த அபிராமி அதைப் பொருட்படுத்தவில்லை.

அபிராமிக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. அதற்காக யாழ்ப்பாணம் திருநெல்வேலிக்கு வந்து ஒரு வீட்டில் தங்கியிருந்து தனது படிப்பை மேற்கொண்டாள்.




அன்று மெடிசின் பிரிவில் கண்காட்சி நடைபெற்றது. அதனைப் பார்ப்பதற்கு அபிராமி தனது நண்பர்களுடன் சென்றிருந்தாள். அப்போது மெடிசின் பிரிவில் 3ஆம் ஆண்டு படிக்கும் ஆனந் அபிராமியிடம், "நீங்க என்ன செய்யிறீங்க? பாடசாலையில் படிக்கிறீங்களா?" என்று கேட்க, அபிராமி "இல்லை நான் Arts கலைப்பீடம் 1ஆம் ஆண்டில் படிக்கிறேன்" என்று கூறினாள்.

"உங்கடை பெயர் என்ன? சொந்த இடம்...?" என்று ஆனந் கேட்டான்.

"என் பெயர் அபிராமி. சொந்த இடம் திருகோணமலை" என்று சொல்ல, உடனே ஆனந்திற்கு சீனு தன் காதலி அபிராமி கலைப்பீடத்தில் படிக்க வருவதாகச் சொன்னது ஞாபகம் வந்தது. உடனே ஆனந் அபிராமியின் குடும்பத்தைத் பற்றி தானே சொல்லி, அப்படித் தானே" என்று கேட்க, அபிராமியும் "ஆம்' 'என்றாள்.

"அது உங்களுக்கு எப்படித் தெரியும்" என்று கேட்டாள்.

"சற்றுப்பொறு" என்று சொல்லிக்கொண்டு அவ்விடத்தில் இருந்து அகன்ற ஆனந் சீனுவை அழைத்து வந்து அபிராமிக்கு முன் நிறுத்தினான். அபிராமிக்கு ஒன்றும் புரியவில்லை.

உடனே சீனு "என்னைக் கண்டுபிடிக்க உன்னால் முடியவில்லையா அபிராமி. கொஞ்ச நாட்களுக்கு முன் உனக்கு ஒரு கடிதம் வந்திருக்கும் தன்னை கண்டுபிடிக்கச் சொல்லி. ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்க,

அபிராமியும் "ஆம்" என்று கூறிவிட்டு வேறெதுவும் பேசாது அங்கிருந்து தனது இருப்பிடத்துக்குச் சென்றுவிட்டாள்.

சீனு அடுத்தநாள் அபிராமியின் இருப்பிடம் தேடி வந்து "அபிராமி, என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?" என்று கேட்க அபிராமி மௌனம் சாதித்தாள். உடனே சீனு "அபிராமி, நான் உன்னைக் காதலிக்கத் தொடங்கி 4 வருசம் முடிஞ்சுது. உன்னைக் கேட்டால் நீ எங்கே மறுத்துவிடுவாயோ எனப் பயந்து இவ்வளவுநாளும் உன்னிடம் கேட்டது இல்லை. நீ என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லிவிட்டால் அதை என்னால் தாங்க முடியாது. அதனால்தான் இவ்வளவுநாளும் சொல்லேல்லை. ஆனாலும் இனிமேலும் என்னால் அப்படியிருக்கமுடியாது. உனக்கு என்னைப் பிடிக்கா விட்டாலும் இல்லை என்று சொல்லாதே" என்றான் சீனு.

அதற்கு அபிராமி "இதை நான் எப்படி நம்புவது" என்று கேட்க அடுத்த நொடியே சீனு அபிராமியின் கரங்களைப் பற்றியபடி "இப்பவே வா நாம பதிவுத்திருமணம் செய்யலாம்" என்றான்.

அபிராமி கையைத் தட்டிவிட்டாள். உடனே சீனுவோ "அபிராமி உனக்கு என்னை நேற்றுத்தான் தெரியும். ஆனா நான் உன்னைக் காதலித்து கல்யாணம் கூட முடிஞ்சுது. இதனை நிஜமாக்க உனது சம்மதம் வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு நேரம் உன் கூட பேசிக்கிட்டு இருக்கிறேன். என்னை உனக்கு பிடிச்சிருக்கா?" என்று மறுபடியும் கேட்டான்.

"எனக்கு உங்களைப் பிடிச்சிருக்கு, பிடிக்கவில்லை என்பது முக்கியமல்ல எங்க அம்மா அப்பாவுடன் கதைச்சு முடிவெடுங்க" என்றாள்.

அடுத்தநாள் சீனுவின் குடும்பத்தினர் இதுபற்றி கதைப்பதற்கு அபிராமியின் வீட்டுக்குச் சென்றனர். அபிராமி - சீனுவின் விடயம் பற்றி அறிந்ததும் அபிராமியின் அப்பா அதற்கு மறுப்புத் தெரிவித்தார். காரணம், சீனு குடும்பத்தினர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.

நாலு வருடங்களாக மொட்டு மலர்ந்து பூத்துக்குலுங்கிய காதல் மதம் என்ற பெயரால் மறுக்கப்பட்டது.

அபிராமி பெற்றோர் விருப்பம் பெரிது என்று கூறினாலும் அவளுக்கு சீனு மீது காதல் ஏற்பட்டது. அதனை அவளால் மறுக்கமுடியவில்லை. ஆனால் மறைக்க முடிந்தது.

சீனு பின்னொருநாள் அபிராமியைச் சந்தித்து அபிராமியின் அப்பா சொன்னதை அபிராமியிடம் கூறினான். அதற்கு அபிராமி "இது நான் எதிர்பார்த்ததுதான்" என்று கூறி கண்களில் நீர்தேங்க உதட்டுப் புன்னகையுடன் சீனுவின் முகத்தைப் பார்க்கமுடியாமல் உள்ளே சென்றாள்.

அடுத்தநாள் சீனு மீண்டும் அபிராமியைச் சந்தித்து "அபிராமி, நீ என்னைப் பிடிக்கவில்லை என்று சொல்லாதே. எனக்குக் கிடைத்த காதல் நினைவுகளோடு நான் உன்னை நினைத்து வாழ்ந்துவிடுவேன். நீ உங்க வீட்டில பார்க்கிற மாப்பிள்ளையைக் கல்யாணம் பண்ணி சந்தோஷமாக இரு" என்றான்.

அதற்கு அபிராமி "அப்படிச் சொல்லாதீங்க. நீங்களும் நல்லதொரு வாழ்க்கையை அமைச்சுக்கனும்" என்றாள். அபிராமி எவ்வளவு எடுத்துச்சொல்லியும் சீனுவால் முடியவில்லை.

"சீனு, நீங்க என்னை மறக்கோனும்" என்றாள்.

அதற்கு சீனு, "அப்படியென்றால் அது ஒன்றால் தான் முடியும். நான் பாதர் ஆவது தான் எனது முடிவு. இது எனது சின்னவயது ஆசை. ஆனா இடையில் தடைப்பட்டது. ஆனாலும் எனது ஆசை நிறைவேறோணும் என்று எழுதியிருக்கு" என்று கூறி சோர்ந்த முகத்துடன் கண்களில் நீர்வழிய மனச்சுமையுடன் அங்கிருந்து சென்றான். அன்று அவளைப் பிரிந்தவன் நான்கு வருடம் கழித்துத்தான் கண்டான்.

அபிராமி ஒரு நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். ஆனால் அவளுக்குத் திருமணமாகவில்லை என்பதை அறிந்த சீனு அபிராமியைச் சந்தித்து சேச்சுக்கு வரும்படி கூறினான். அன்று பின்னேரம் அபிராமி அந்தச் சேச்சுக்குச் சென்றாள்.

அங்கு நின்றிருந்த சீனு அபிராமியிடம், "பாதர் என்ற வகையில் நான் ஒன்று சொல்லுவேன் கேட்பாயா?" என்று கேட்க,

அபிராமியும் "சொல்லுங்க பாதர்" என்றாள். அதற்குச் சீனு, "ஆண்கள் கல்யாணம் பண்ணிக்காம வாழ்ந்திடலாம். ஆனா ஒரு பெண் அப்படி வாழ்ந்திடமுடியாது. ஊர் உலகம் நாலுவிதமாப் பேசும். உன்னுடைய அம்மா அப்பா அண்ணங்க கவலைப்படுவாங்க. நீ

ச. மது
திருநெல்வேலி

படிச்சவ. புரிந்து நடப்பாய் என நினைக்கிறேன்" என்று கூறினார்.

அபிராமியும் சீனு சொல்வதைக் கண்களில் நீர்ததும்பப் பொறுமையாகக் கேட்டாள்.

வீட்டுக்குச் சென்ற அபிராமி கல்யாணத்திற்கு சம்மதித்தாள். வீட்டில் உள்ளவர்களுக்கு ஒரே சந்தோஷம்.

அதன் பின்பு ஒரு வருடம் கழித்து இன்று கல்யாண அழைப்பிதழுடன் கண்களில் நீர்வழிய அபிராமி "பாதர்... பாதர் " என்றழைக்கிறாள்.

மீண்டும் அக்குரலின் அழைப்பிற்கு இணங்கி சீனு தன் நினைவைவிட்டு வந்தான்.

"பாதர், எனக்குப் பாவ மன்னிப்புத் தருவீங்களா" என்றாள்.

"உனக்கா... எதற்கு" என்றார் பாதர்.

"தாங்க பாதர்" என்று சொல்லிக்கொண்டு அந்த மறைவுக்கு சென்றாள் அபிராமி.

(...ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் ஆட்சியமைக்க ஷியா (முஸ்லிம்) கட்சிக்கு வாய்ப்பு

ஈராக்கின் அடுத்த பிரதமராக ஷியா (முஸ்லிம்) கட்சி சார்பில் அல் ஜபாரி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது.

ஈராக்கில் கடந்த மாதம் தேசிய சபைக்கு நடந்த பொதுத்தேர்தலில் அமெரிக்காவின் எதிர்பார்ப்புக்கு மாறாக, ஷியா முஸ்லிம் கட்சி சுமார் 50 சதவீத வாக்குகளைப்பெற்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.

ஈராக் வரலாற்றில் நீண்ட இடைவேளைக்குப் பிறகு பெரும்பான்மை ஷியா முஸ்லிம்களின் ஆதரவு ஷியா கட்சிக்குக் கிடைத்துள்ளது. இந்தக் கட்சி சார்பில் யார் அடுத்த பிரதமராவார் என்பது இன்னும் முடிவாகாத நிலையில் அப்பதவிக்குப் பிரதான போட்டியாளராக லண்டனில் வாழ்ந்த டாக்டரான அல் ஜபாரியின் பெயர் அடிபடுகிறது.

அதேநேரம் அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் முன்னாள் ஆதரவாளரான அகமது சலாபியும் களத்தில் உள்ளார். எனினும், ஷியா கட்சிக் கூட்டணி அல் ஜபாரி பெயரைத் தேர்ந்தெடுக்க வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. இதுகுறித்து அல் ஜபாரி பக்தாத்தில் அளித்த பேட்டியில்,

ஈராக்கில் இருந்து அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணிப் படைகளை உடனே வெளியேறும்படியு வற்புறுத்தமாட்டேன். நாடு இரத்தக்களரியாக இருக்கும இநத நேரத்தில், அப்படைகள் வெளியேறவேண்டும் என்று எப்படி நாங்கள் முடிவெடுக்க முடியும் என்று கூறியுள்ளார். (து)



நியூயோர்க் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 129ஆவது வெஸ்ட் மின்ஸ்டர் கென்னல் கிளப் நாய்கள் கண்காட்சியில் ஜேர்மன் நாட்டுவகையைச் சேர்ந்த குட்டைமுடி கொண்ட கார்லி என்ற அழகிய நாய் முதல் பரிசை வென்றது. அந்த வெற்றிக்குப் பரிசாக எஜமானி மிக்காலி ஒஸ்டர் மில்லர் அதற்குப் பிடித்தமான சொக்லெட்டுகளைத் தின்னக்கொடுத்துப் பாராட்டுகிறார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்ந்து ஏற்படும் நிலநடுக்கம்

(கொங்கொங்)

இந்தோனேஷியாவில் தொலைதூர தீவு ஒன்றில் பிலிப்பைன்ஸ் அருகே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பலமான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இதன் அளவு 6.4 எனப் பதிவாகியது.

டிசெம்பர் 26ஆம் திகதி சுனாமி தாக்குவதற்கு முன்பு இந்தோனேஷியாவில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதுமுதல் அவ்வப்போது நிலநடுக்கம் தொடர்ந்து ஏற்பட்டு வருகிறது. நிலநடுக்கம் காரணமாக உயிர்ச்சேதம், உடைமைகள் சேதம் ஏற்பட்டதா என்ற தகவல்கள் உடனே கிடைக்கவில்லை. 6.4 என்ற அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பதால் இதன் பாதிப்பு மிகக் கடுமையாக இருக்கும். நிலநடுக்ககம் ஏற்பட்டுள்ள பகுதி ஏற்கெனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் புதன்கிழமை அதிகாலையில் 5.4 என்ற அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மத்திய டோக்கியோவில் கடடடங்கள் குலுங்கின. உறக்கத்திலிருந்த மக்கள் பதறியடித்தபடியே எழுநதுகொணடனா். உயிா், உடைமை சேதங்கள் குறித்து விபரங்கள் தெரியவில்லை.

வடகிழககு வங்கதேசததில் சில்ஹெட் நகரில் கடந்த புதன்கிழமை லேசாக நிலநடுக்கம் உணரபபடடது. இதன் அளவு 4.2 சேதவிபரம் கிடைக்கவில்லை. (து)

WORLD NEWS
உலக தரிசனம்



தென்கொரியா நாட்டிலுள்ள காட்குனங் ஸ்டேடியத்தில் நடந்த ஸ்கேட்டிங் போட்டியைத் தொடர்ந்து, ஐஸ் நடனம் அரங்கேற்றப் பட்டது.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோடி தனீத் பெல்பின் - பெஞ்சமின் அகோஸ்தா இருவரும் ஆடிய ஐஸ் நடத்தின் மயிர்க் கூச்செரியும் காட்சியை இங்கே காண்கிறீர்கள்.

# கள்ள வாக்குப்போட ஜெயலலிதா திட்டம் தி.மு.க. வெளியிடும் திடுக்கிடும் தகவல்

(சென்னை)

வரும் சட்டசபை தேர்தலில் கள்ள வாக்குப் போட ஜெயலலிதா திட்டமிட்டுளளார் என்று தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. படுதோல்வி அடைநது தமிழகம், புதுவையில் உள்ள 40 தொகுதிகளையும் இழந்தது. அதன்பிறகு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா மின்னணு இயந்திர வாக்குப்பதிவு முறையைக் கடுமையாக எதிர்க்கத் தொடங்கினார். இந்த மாதிரியான வாக்குப்பதிவு முறை நம்பகதன்மை இல்லாததாக உள்ளது. இதைப் பயன்படுத்தி மிக எளிதாக ஏராளமாக கள்ள வாக்குப் போட்டுவிடுகிறார்கள் என்று ஜெயலலிதா கூறினார்.

நேற்றுமுன்தினம் நடந்த அ.தி.மு.க. பொதுக்குழுக் கூட்டத்திலும் இதே கருத்தை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மின்னணு இயந்திர வாக்குப்பதிவு முறையை இனிவரும் தேர்தல்களில் பின்பற்றக்கூடாது என்றும் முன்பு நடைமுறையிலிருந்த வாக்குச்சீட்டு முறைதான் மீண்டும் கொண்டுவரப்பட



வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதுகுறித்து தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் வெளியிட்ட அறிக்கையில், வாக்காளர் பட்டியல் குளறுபடிகளுக்கு அரச ஊழியர்களைக் காரணம் காட்டித் தப்பித்துக்கொள்ளும் வகையில் முதலமைச்சர் ஜெயலலிதா அ.தி.மு.க. பொதுக்குழுவில் பேசியிருக்கிறார். ஆட்சியினா மாலை 6 மணிக்கு மேல யாருக்கும் தெரியாமல் சைதை மண்டல மாநகராட்சி அலுவலகத்தில் சோட்பித்தது குறித்து கழகத் தோழர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் அன்றைய மாநகராட்சி ஆணையர் சம்பத உள்ளிட்ட 9 அதிகாரிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று தேர்தல் ஆணையமே ஆணையிட்டது எனத் தெரிவித்திருக்கிறார்.

டில்லியில் காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெயந்தி நடராஜன் தமிழகத்துக்கு சட்டசபைத் தேர்தல் நடைபெறும்போது அதனுடன் சேர்ந்து பாராளுமன்றத் தேர்தலும் வந்துவிடும் என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

இதைச் சொல்வதற்கு அவர் இந்தியாவின் பிரதமர் அல்ல. ஒரு மாநிலத்தின் முதல்வர்தான் அவர் என்பதை நினைவுகொள்வது நல்லது. மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு 5 ஆண்டுகால ஆட்சியை முழுமையாக நிறைவேற்றி முடிக்கும். தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளிக்க வாக்குறுதிகளை மத்திய அரசு நிறைவேற்றும். குறைந்தபடச திட்டங்

நடத்தின் மயிர்க் கூச்செரியும் காட்சியை இங்கே காண்கிறீர்கள்.

களில் பின்பற்றக்கூடாது என்றும் முன்பு நடைமுறையிலிருந்த வாக்குச்சீட்டு முறைதான் மீண்டும் கொண்டுவரப்பட

எரிபொருள் சிக்கனத்தை முன்னிட்டு அதிகதூரம் பயணமாகும் போயிங் 777 விமானம் நேற்று முன்தினம் அமெரிக்காவிலுள்ள வோஷிங்டனில் அறிமுகப்படுத்தப் பட்டது. இந்த விமானத்தில் 301பேர் ஒரே நேரத்தில் பயணம் செய்யலாம். இது 17ஆயிரத்து 446 கி.மீ தூரம் இடைவிடாமல் பறக்கக் கூடியது.



காட்டித் தப்பித்துக்கொள்ளும் வகையில் முதலமைச்சர் ஜெயலலிதா அ.தி.மு.க. பொதுக்குழுவில் பேசியிருக்கிறார். ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசு ஊழியர்களை மிரட்டி வாக்காளா பட்டியலில் ஆளுங்கட்சியினர் செய்திருந்த குளறுபடிகள் நாடறிந்தவை. சைதாப்பேட்டைத் தொகுதியில் மாத்திரம் விதிகளை மீறி 17 ஆயிரம் புதிய வாக்காளர்களுக்கான விண்ணப்பப்படிவங்களை ஆளுங்கட்சிக்கும். தேர்தல் நேரத்தில் மக்களுக்கு அளிக்கு வாக்குறுதிகளை மத்திய அரசு நிறைவேற்றும். குறைந்தபடச திட்டங்களை நிறைவேற்றிச் சாதனை படைக்கும்.

பீகார், ஜார்க்கண்ட், அரியானா ஆகிய 3 மாநிலங்களிலும் நடைபெறுகிற சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸ் அல்லது காங்கிரஸ் கூட்டணி தான் ஆட்சியைக் கைப்பற்றும் எனத் தெரிவித்துள்ளார். (து)

## 53 ஆண்டுகளுக்குப் பின் புதிய பஸ் சேவை இந் - பாக். நல்லுறவுக்கு அறிகுறி

இந்தியா - பாகிஸ்தான் இடையே நம்பிக்கை ஏற்படுத்தும் முயற்சிகளின் உச்சக்கட்டமாக ஜம்மு - காஷ்மீா தலைநகா ஸ்ரீநகருககும் - பாகிஸதான ஆக்கிரமிப்பிலுள்ள காஷ்மீர் பகுதி தலைநகர் முசா.்.ப்ராபாத்திற்குமிடையே பேருந்துப் போக்குவரத்து தொடங்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் இந்திய அயலுறவு அமைச்சர் நடவர் சிங், பாகிஸ்தான் அயலுறவு அமைசசர் குர்ஷித்மாமூது கசூரி ஆகியோடையே நடநத பேசசுவார்ததைக்குப் பின் வரலாறறு முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஒப்பந்தத்துக்குப் பின் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய அயலுறவு அமைச்சர், ஏப்ரல் 7ஆம் திகதி முதல் ஸ்ரீநகர் - முசா.்.பராத இடையே பேருந்து போக்குவரத்துத் தொடங்கும் என்று அறிவித்தனர்.

காஷ்மீரின் ஒரு பகுதியை பாகிஸ்தான் ஆக்கிரமித்த 1952ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட பேருந்து போக்குவரத்து 53 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடங்குகிறது. (து)



அவுஸ்திரேலியாவிலிருந்து இராமேஸ்வரம் கடற்கரைக்கு வந்துள்ள பிளமிங்கோ பறவைகள்தான் இவை.

## கல்வீரல் புற்றுநோயைத் தடுக்க காப்பி குடிக்குமாறு ஆலோசனை

காப்பி குடிக்கும் பழக்கம் கல்லீரல் புற்றுநோயைத் தடுக்க உதவும் என்று அண்மையில் ஜப்பானில் நடைபெற்ற மருத்துவ ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

காப்பி குடிக்காதவர்களுடன் ஒப்பிடும்போது, காப்பி குடிப்பவர்களுக்குக் கல்லீரல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு 50 சதவீதம் குறைவு என்று இந்த ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

ஜப்பானியத் தலைநகரான டோக்கியோவில் உள்ள தேசிய புற்றுநோய் மையத்தைச் சேர்ந்த மோனாமி இனோயு, காப்பி குடிக்காதவர்களில் லட்சத்தில் 547 பேருக்குக் கல்லரல புற்றுநோய ஏற்படுகிறது. ஆனால், காப்பி குடிப்பவர்களில் லட்சத்தில் 214 பேருக்கே கல்லீரல் புற்றுநோய் ஏற்படுகிறது. நாள்தோறும் 2 கோப்பை காப்பி குடிப்பவர்களைவிட 4 கோப்பை காப்பி குடிப்பவர்களுக்குக் கல்லீரல் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புக் குறைவு எனத் தெரிவித்துள்ளார்.(து)

# கண்ணீர் கசியக் கதறிப்புலம்ப கடவுள் கருணைகாட்டுவார்

## வெள்ளி நற்சிந்தனை

சயந்தன் சதமகனுக்கு மைந்தன், சூரபன்மன் ஆட்சிக் காலத்தில் சதமகன் அமராவதி



யில் அமர அஞ்சினான். இந்திரன் விண்ணுலகை விட்டு இந்திராணியுடன் மண்ணுலகிற்கு மறைந்து போனான். சயந்தன் தந்தையின் மெலிவு கண்டான். ஆட்சிப்பீடத்தில் சயந்தன் அமர்ந்தான். பானுகோபன் சுவர்க்கத்தை முற்றுகையிட்டான். அங்கு நிகழ்ந்த போரில் பானுகோபன் சயந்தனையும் தேவர்களையும் சிறைசெய்தான். பானுகோபன் பதுமகோமளைக்குப் புதல்வன், பதுமகோமளை சூரனுடைய பட்டத்துத் தேவி.

சூரன் ஆணைப்படி சயந்தனும் தேவர்களும் வீரமகேந்திர புரச் சிறையில் அடைக்கப்பட்டார்கள், சிறைக்காவலாளர்களால் அல்லும் பகலும் தேவர்கள் சொல்லொணாத் துன்பத்தால் வருந்தினார்கள். ஒரு நாளா? இரண்டு நாளா? நூற்றெட்டு யுகங்கள் தண்டனைக்கு ஆளான சயந்தன் மேனி தழும்பால் தடித்தது. சயந்தன் அவுணருக்கு அஞ்சினான். மௌனமாக ஆற்றாது புலம்பினான்.

சயந்தன் புலம்பல் மகா தேவராகிய சிவபிரானை இலக்காகக் கொண்டது. 'எந்தத் தேவர் சிந்தைக்கும் எட்டாத சிவனே! வந்திப்பவர் பாவம் மாற்ற வல்லவரே!! அந்நாளில்

''யானைக்கும் நாரைக்கும் கரிக்குருவிக்கும் நாகத்திற்கும் சிலந்திக்கும் ஆன்மாக்களுக்கும் அருளினீர்கள்

கங்கையைத் தரித்தாய்! கறைமிடற்றாய்! கண்ணுதலாய்!! திங்கள் புனைந்தாய்'' சிவனே சிவனே என்று நாங்கள் நாவலிக்க ஓலமிடுகின்றோம்!! ஆன்மாவிற்குப் பரவான்மாவான பசுபதியே கேட்டிலையோ? வாராய் தமியேன் உயிர்காக்க வாராயோ?

''அந்தகாசுரன் ஆற்றல் அழித்தீர்! எமக்கு அருளலாகாதா?''

''கொக்காசுரனைக் கொன்றீர் எம்குறை கொள்ளலாகாதா?''

ஓலக்கடலில் எழுந்த ஆலத்தை உண்ட சீலத்தை எமக்குச் செய்யலாகாதா?

''செற்றத்துடன் வந்த சலந்தரனை ஒற்றைத் திகிரியால் உடல் பிறந்த நற்றிறத்தை நமக்கு நல்கலாகாதா?''

''தந்திக் கொடியோனைக் காசியில் தடிந்த அந்தக் கருணைக்கு அடியேம் பற்றிலமோ?''

''பஞ்சராக்கதர் வீரற் சிந்திக் கோரற் செய்த கொடுந் தொலை அவுணரிடம் கொள்ளலாகாதோ?''

''அந்தப் புரத்தைச் சிரித்தது போல் இந்தப் புரத்தை எரிக்க உதவ ஒண்ணாதோ?''

''இராக்கதரால், அசுரரால், முனிவரால், பிறரால், தேவரால அரக்கரால் ஒன்று செய்ய ஒன்னாகித் துன்பத்தில் தோய்ந்த தன்றி என்று இன்புற்று இருந்தோம்''

''குளிர்ந்த தேன் சொரியும் கற்பக நீழல் வாழ்வை விரும்பிக் கொண்டேன் பெருந்துயரும் சுவர்க்கமும் சுவை அற்றது என்று கண்டேன். ஏனைத் தேவர் பதங்களின் இழிவையும் தெரிந்து கொண்டேன். நான் சிவபதத்தையே மெய் என்று கண்டேன்''

தில்லைத் திருநடஞ் செய்தேலே! துன்பந் தரும் பிறவி போதும் போதும். சுவர்க்கத் துன்பமும் போதும் போதும்.

பொன் பொலியும் கொன்றைப் புரிசடையாய்!! இத் துன்பத்தை மாற்றித் தேவரீருடைய அத்திருவடி நீழல் இன்பத்தைத தந்தாள்வீர்!!

இவ்வாறு புலம்பி மயங்கும் சயந்தன் கனவில் இந்தக் கடவுள் காட்சி காட்டினார். அவன் மீது இரங்கினார். கருணை கூர்ந்து சொல்வார்!

''சயந்தனே! அஞ்சற்க நான் நாளை திருச்செந்தூரை நீங்கி இங்கு வருவோம். பத்துத் தினங்களில் சூரனாதியரைச் சங்கரிப்போம். பின்னர் வானவருடன் உன வெஞ்சிறை நீக்குவோம். உங்கள் இழந்த செல்வங்களை பெறுவோம உன் துன்பத்தை நீக்குவாய்.

இவ்வாறு தீவினை நீங்கி மனத் தெளிவு பெற்ற ஞானவான்களுடைய அறிவில் சின்மலமாகத் திகழும் செவ்வேள் பெருமான் சயந்தனுக்கு ஆறுதல் கூறித் தேறுதல் தந்து மறைந்தருளினார். □

**சிவ சண்முகவடிவேல்**

---

### தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையும் சிறுவர்களை

# பெற்றோர்களிடம் ஒப்படைக்கும் பணிகளில் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவும் இணையலாம்

## வடக்கு- கிழக்கு மனித உரிமை செயலகம் அழைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள செயலகத்தின் தலைவர் வண. கருணாரட்ணம் அடிகளாரை செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் கிளிநொச்சியில் சந்தித்துள்ளனர்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழு சார்பில் மத்திய மற்றும் தெறகாசிய நடவடிக்கைகளுககான தலைவர் பேர்னாட் ஜீலியர், இலங்கைக்கான குழுத் தலைவர் தியாரி மெய்ராட், உபகுழுவின் தலைவர் ரச்சுல் பேர்னாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்மையில் படுகொலை செய்யப்பட்ட வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலக நிறுவுனர்களில் ஒருவரான சந்திரநேருவுக்கு செஞ்சிலுவை சர்வதேசக் குழு தனது அனுதாபத்தைத் தெரிவித்தது.

அண்மையில் விடுதலைப் புலிகளால் பெற்றோரிடம் ஒப்படைக கப்பட்ட 23 சிறுவர்களின் பெயர்ப் பட்டியலை குழுவினரிடம் காண்பித்த கருணாரட்ணம் அடிகளார், அந்த சிறுவர்களில் ஐவர் பெற்றோருடன் போகமாட்டோம் என்று அடம்பிடித்தார்கள் என்றும் கடைசியில் ஒருவாறு அனுப்பிவைத்ததாகவும் இன்னும் இருவர் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்காக தம்மிடம் உள்ளனர் என்றும் புலிகள் அமைப்பில் இணையவரும் சிறுவர்களை பெற்றோரகளிடம் மீள ஒப்படைக்கும் இந்தப்பணியில் தம்முடன் செஞ்சிலுவை சர்வதேசக்குழுவும் இணைந்து பணியாற்றலாம் என்றும் தெரிவித்தார்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளநல வேலைத்திட்டங்கள் குறித்து செஞ்சிலுவை சர்வதேசக்குழுவினர் கேட்டதற்கு, அவ்வாறான வேலைத்திட்டங்களை தாம் ஒழுங்கு செய்து வருவதாகவும் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் இவ்வாறான பணியை மேற்கொண்டுவருவதாகவும் கூறினார்.

யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கும் ஆழிப்பேரலையால் ஏற்பட்ட இடப்பெயர்வுக்கும் இடையில் என்ன வித்தியாசமெனில், யுத்த இடப்பெயர்வில பெணகள் காப்பாற்றப்பட்டார்கள்.

ஆனால் இயற்கை அனர்த்தத்தில் துரதிஷ்டவசமாக பெருந்தொகையான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உளநல மருத்துவம், கருத்தரங்குகள் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன என்றும அவர் எடுத்துக் கூறினார். சந்தப்பு சிநேக பூர்வமாக நடைபெற்றது. (ப)

---

## ஹோமியோ மருத்துவமுறை அபிவிருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

இலங்கையில் ஹோமியோபதி மருத்துவ முறை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

சுதேசிய வைத்தியதுறை அமைச்சின் ஹோமியோபதி ஆலோசகர் டாக்டர் ஈஸ்வரதாஸ் இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கையில்,

நாட்டின் சகல மாவட்டங்களிலும் ஹோமியோபதி வைத்தியசாலைகள் நிறுவப்படவுள்ளதாகக் கூறினார்.

அத்துடன், ஹோமியோபதி வைத்தியர்கள் பதிவு செய்யப்படவுள்ளார்கள். மருந்தகங்களும் பதிவு செய்யப்படும்.

வாயன்று நடைபெற்ற ஹோமியோபதி மருத்துவம் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய டாக்டர் ஈஸ்வரதாஸ் இத் தகவல்களை வெளியிட்டார்.

இக் கருத்தரங்கில் மாகாண சுதேச வைத்திய அமைச்சர்கள், மாகாண ஆயுர்வேத ஆணையாளர்கள், ஹோமியோபதி வைத்தியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தானின் லாகூர் பல்கலைக் கழகத்தில் ஹோமியோபதி டிப்ளோமா பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு 12 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## மின்சார சபை தொழிற்சங்கத்தினர் அமைச்சர் சுசிலுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கை மின்சார சபையினை தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி வரும் சபையின் செயலரை பணி நீக்கம் செய்யப் போவதாக எரிசக்தி மின்வலுத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அறிவித்துள்ளார்.

அமைச்சருக்கும் மின்சார சபை தொழிற்சங்கத்தினருக்கும இடையில் நேற்றுமுன் தினம் பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்றது.

தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தனியார் மயக்கொள்கை பிரேரணையைத் திரும்பப்பெற்றுக் கொள்ள வேண்டும் என தொழிற்சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர். இதற்கு அமைச்சர் சாதகமான பதிலை வழங்கியதாக தொழில சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சமயா சமய ஊழியர்களாகக் கடமையாற்றும் 1,500 பேருக்கு நிரந்தர நியமனம் வழஙகவும் அமைச்சர் அந்தச் சந்தப்பின் போது உறுதியளித்

---

## கூட்டம்

(பொன்னாலை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிககு உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ப-49)

★ ★ ★

(பொன்னாலை)

கியூடெக் நிறுவனத்தின் தீவகப் பகுதியைச் சேர்ந்த உயிர்ப்பூட்டல் குழுவினர்களுக்கான மக்கள் குழுக்கூட்டம் நாளை முற்பகல் 10.00 மணிக்கு தம்பாட்டி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனலைதீவு, எழுவைதீவு, நெரிஞ்சிமுனை, தம்பாட்டி, காரைநகர் ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.(ப-49)

## கடன் வழங்கல்

(பொன்னாலை)

தென்மராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு கடன்களை வழங்கி வருகின்றது.

வீடு புனரமைப்பு வேலைகளுக்கு உறுதிப் பிணையுடன் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்,

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் அங்கத்தவர்களுக்கு ''நியாப்'' திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா வரையும் கடனாக வழங்கப்பட்டுவருகின்றது.

இதேவேளை, சங்கப் பணியாளர்களுக்கும் 50 ஆயிரம் ரூபா வரையும் வழங்கப்பட்டு வருகின்றது. (ப)

## நினைவாலயம்

(பொன்னாலை)

ஆழிப்பேரலை இயற்கையனர்த்தத்தில் பலியான பொதுமக்களின் நினைவாக மணற்காட்டில் நினைவாலயம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சிப் பிரதேச அமைப்புகளின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இணைத்து மேற்படி பிரதேசத்தில இவ் நினைவாலயத்தை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-49)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் அ.கைலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இ.கைலைநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## கருத்தரங்கு

(பொன்னாலை)

கியூடெக் நிறுவனத்தின் பெணகள் அமைப்பினா் நடாத்தும் பெண்கள் உரிமை தொடர்பான முழுநாள் கருத்தரங்கு ஒன்று வரும 23ஆம் திகதி காலை 9.00 மணிக்க இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கு கியூடெக் நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களையும் இதில் தவறாது பங்கு பற்றுமாறு, பெண்கள் அமைப்பின் பொறுப்பாளர் திருமதி ச.லலிதா விக்ரர் தெரிவித்துள்ளார். (ப-49)

## வாராந்த நிகழ்வு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரால் நடாத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு சிறுப்பிட்டியூர் வில்லிசைக் கலைஞர் இ.சத்தியதாஸின பக்திப் பாடல் நிகழ்வு

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 40

வழியில் அவரைத் திருச்சியில் இறக்கிவிட்டு நான் மதுரைக்குச் சுகமே சேர்ந்தேன்.



### மற்றொரு நிகழ்ச்சி

ஒருசமயம் சேலத்தில் என் நண்பர் விசுவநாதன் செட்டியார் என்னைச் சந்தித்து "சேந்தமங்கலத்தில் உயர்நீதிபதி திரு.சுந்தரம் செட்டியாரின் உறவினர் வீட்டில் திருணம். நீங்கள் வந்து கதா காலக்ஷேபம் செயய வேண்டும்" என்று கூறி உறுதிசெய்தார்: 'பெரிய வீட்டு விசேஷம். தாங்கள் வராமல் நின்றுவிடக்கூடாது' என்று வற்புறுத்திச் சொன்னார்.

அதற்கு பதில் நான் "உயிர் இருந்தால் வருவேன்" என்று கூறினேன்.

அந்தத் திருமணத்திற்கு முதல் நாள் ஆர்க்காட்டுக்கருகில் திமிரி என்ற ஊரில் ஒரு நண்பருடைய சீமந்த நிகழ்ச்சியில் என் விரிவுரை மாலை நடைபெற்றது. திமிரியிலிருந்து குதிரை வண்டியில ஆர்க்காடு வந்து, அங்கிருந்து பஸ் மூலம் காட்பாடி போய் ரயிலேறி சேலம் போய்ச் சேர்ந்தமங்கலம் போகவேண்டும்.

திமிரியில் மாலை விரிவுரை முடிந்தவுடன் பலரும் திருநீறு கேட்டு என்னுடைய நேரத்தைக் கவர்ந்து கொண்டார்கள். காலத்தில் புறப்பட வொட்டாமல் என்னைத் தாமதிக்கச் செய்தார்கள். நான் அவசரமாகக் குதிரைவண்டியில் ஏறி ஆர்க்காட்டுக்கு அவசரமாகச சென்றேன். வண்டிக் குதிரையோ எனில் சாந்ததைக் கடைப் பிடித்தது, இரவு 8மணி இருக்கும்.

வேலூருக்குப்போகும் கடைசி பஸ் குறித்த நேரத்தில் போய் விட்டது. அது யுத்த சமயம் ஆனதனால் வாடகைக்கார் கிடைப்பதும் அரிதாக இருத்தது. என்னுடன் 5 அன்பர்கள் இருந்தார்கள். அவர்களைக்கொணடு "ஒரு வாடகைக் கார் நூறு ரூபாயானாலும் குற்றமில்லை. அமைத்துக் கொடுங்கள்" என்று ஏவினேன். அவர்கள் ஊர் முழுவதும் தேடி கார் கிடைக்கவில்லை என்று கூறி கைவிரித்துவிட்டார்கள்.

இரவு 9 ஆகிவிட்டது. காட்பாடியில் 10மணிக்கு ரயில், "உயிர் இருந்தால் வருகிறேனென்று சொன்னேனே, முருகா! இந்த அவலநிலை எனக்கு ஏற்பட்டு விட்டதே! ஏழைபங்களா! கருணைக் கடலே! கந்தநாயகா! இந்த வேளை என் செய்வேன்?" என்று இறைவனை இதயத்தில் துதி செய்து, ஆர்க்காட்டு பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில் ஒரு ஹோட்டலின் வாசற்படியில் இருந்து கண்களை மூடி தியானம் செய்து கொண்டிருந்தேன்.

"ஐயா! நீங்கள் எங்கு போகின்றீர்?" என்ற ஒரு குரல் என் செவியில் விழுந்தது. கண்களைத் திறந்து பார்த்தேன். என் எதிரில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அதன் டிரைவர் தான் என்னை அழைத்தார். நான் என் கண்களையே நம்பமுடியாமல் கனவா, நனவா என்று விரள விரள விழித்துப் பார்த் தேன். பின்னர் அந்த டிரைவரைப் பார்த்து "என்ன செய்தி?" என்று கேட்டேன். அவர் "என் வாடகைக் கார் வெறுமனே வேலூருக்குப் போகிறது. தாங்கள் ஏறிக்கொள்ளுங்கள் வேலூருக்குக் கொண்டு போய் விட்டு விடுகிறேன்" என்றார்.

நான் வாடகை என்ன வேண்டும் என்று கேட்டேன். நூறு ரூபர்யானாலும் கொடுக்கத் தயாராக இருந்தேன். அந்த டிரைவர் "பஸ் கட்டணம் நபர் ஒன்றுக்கு 6 அணா அதனைக் கொடுத்தால் போதும். ஏறுங்கள்" என்றான். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. முருகனே இந்த வடிவத்தில் வந்து கருணை புரிகிறார் என்று கருதிக் கண்ணீர் வடித்தேன்.

உடன் வந்த ஐவருடன் பூசைப் பெட்டியை எடுத்துக்கொண்டு அந்தக் காரில் ஏறினேன். டிரைவர் காட்பாடிக்கே என்னைக்கொண்டு போய்விட்டு விட்டார். ஆறணா வீதம் ஆறுபேருக்கு $2^1/_4$ ரூபாவுடன் ஒரு ரூபாய் சேர்த்து $3^1/_4$ ரூபாய் டிரைவரிடம் கொடுத்தேன். அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு வணங்கி விடைபெற்றுக்கொண்டார். நான் ரயில் ஏறி சேலம்வழி சேந்தமங்கலம் போய் நிகழ்ச்சியில் கலந்துகொண்டேன். இவ்வாறு முருகப்பெருமான் அவ்வப்பொழுது செய்த கருணை அளவற்றன.

### மூன்றாவது மலாயா யாத்திரை

மூன்றாவது முறையாக மலாயாவில் உள்ள அன்பர்கள் என்னை அழைத்தார்கள். இம்முறை நான்மட்டும் தனியே 1961வது வருடம் சென்னையில் விமானம் ஏறி சிங்கப்பூருக்குச் சென்றேன். சிங்கப்பூரில் திரு கோவிந்தசாமிப்பிள்ளை பக்கிரிச்சாமிப் பிள்ளை முதலியவர்கள் வந்து வரவேற்பு செய்தார்கள். அங்கு ஒரு கிருஷ்ணன் கோவிலில் தங்கினேன். மலாயாவிற்குச் சென்ற மூன்று முறைகளிலும்-ஆசாரத்தை முன்னிட்டு கோவில்களிலேயே தங்கும் நியதியை மேற்கொண்டேன். அந்த முறைப்படி இப்பொழுது கிருஷ்ணன் கோவிலில் ஒரு அறையில் தங்கினேன். எலெக்ட்ரிக் ஹீட்டரில், ப்ரெஷர் குக்கர் வைத்து நானே சமையல் செய்து கொண்டேன் அரைமணி நேரத்தில் சமையல் முடிந்துவிடும். கடிதங்கள் எழுதிக் கொண்டே சமைத்து விடுவேன். உணவு அமுதம போல் சுவையாக ருசியாக இருக்கும்.

காளியம்மன் கோவிலில் ஒருவாரம் இராமாயணம் சொன்னேன். "ஸம்பாதிக்கு எரிந்த சிறகு அனுமன் முதலியோர் இராம நாமத்தைப் பாராயணம் செய்ததால் முளைத்தது" என்று கூறினேன்.

மறுநாள் காலை வழிபாடு முடித்தபின் சமையல் செய்து கொண்டிருந்தேன். ஒரு மாணவர் வந்து ஜன்னல் அருகில் நின்று "சுவாமி! ஒரு சந்தேகம் கேட்கலாமா?" என்று பணிவுடன் கூறினார்.

"கேட்கலாம்" என்றேன். அவர் "நேற்று விரிவுரையில் இராமநாம பாராயணத்தால் ஸம்பாதிக்கு எரிந்த சிறகு முளைத்தது என்று கூறினீகளே! இப்பொழுது நான் ஒரு பச்சைக் கிளியைக் கொண்டு வருகிறேன். அதன் சிறகை வெட்டிவிடுவேன். தாங்கள் இராமநாம பாராயணம் செய்து சிறகை முளைக்க வைப்பீர்களா?" என்று கேட்டார்.

அவருடைய குரலில் பணிவும், தணிவும் இருந்தன. அடக்கமாகவே காட்சி அளித்தார். விதண்டாவாதம் செய்பவராகத் தெரியவில்லை.

"தம்பி! இராமநாம பாராயணத்தால் பறவை அரசாகிய ஸம்பாதிக்கு எரிந்த சிறகு முளைத்தது என்ற வரலாறு பொய்யன்று. சத்தியமான கதை. இராமநாமமும் தன் ஆற்றலை இழந்துவிடவில்லை. மந்திரத்திற்கு ஆற்றல் மிகுதியாக வேண்டுமானால் கோடிக் கணக்காக ஜெபித்து, உருவேற்றி மந்திர சக்தி பெறவேண்டும். உப்பு, புளி, மிளகாய் சமையலுக்குப் பொதுவானவை. சிலர் சமைத்தால் அமுதம் போல் சுவையாக இருக்கின்றது. சிலர் சமைத்தால் விளக்கெண்ணை போல சுவையற்று வெறுப்பை விளைவிக்கின்றது. இதற்கு என்ன காரணம்? சமையல் கலையில் தேர்ச்சி பெற்றவர் செய்தால்தான் உணவு சுவைபெறுகிறது.

மிருதங்கம் என்ற வாத்தியத்தை சிறந்த கலைஞர் வாசித்தால் 500,1000என்று சம்பாவனை பெறுகிறார். அந்த மிருதங்க ஓசை செவியில் அமுதம் போல் இனிக்கின்றது. சிலர் வாசித்தால் சம்பாவனை 5 ரூபாய்தான். டமாரம் அடித்தது போல் வெறுப்பைத் தருகின்றது. மிருதங்கம் ஒன்று தான். பலகாலும் அதை வாசித்து அந்த வித்தையில் சத்தி பெற்றவர்கள் வாசித்தால்தான் அதில் இனிமை விளைகின்றது. அதுபோல் மந்திரத்தைப் பலகாலும் ஜெபித்து மந்திரசித்தி பெற்றவர்கள், அந்த மந்திரத்தைச் சொல்லும் பொழுது அதற்குப் பயன் விளைகின்றது. அனுமன் முதலியோர் இராமநாமத்தைக் கோடிக்கணக்காக உருவேற்றி மந்திரசித்தி பெற்றவர்கள். அதனால் மந்திரத்தைச் சொன்னவுடன் எரிந்த சிறகு முளைத்தது. நான் கோடிக்கணக்காகச் சொல்லி மந்திரசித்தி பெறாதவன் என்றேன். நான் கூறிய வார்த்தையால் அவர் சமாதானம் அடைந்தார் . (தொடரும்)

# கோபி அனானுக்கு எதிராக கொழும்பில் கண்டனப் பேரணி

## பிக்குகள் முன்னணி ஏற்பாடு

வெலிக்கந்தையில் புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல்துறைப பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட நான்கு போராளிகள் மற்றும் மாமனிதர் சந்திரநேரு ஆகியோா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் கண்டனம் தெரிவிததமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குகள் முன்னணி நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள ஐ.நா.அலுவலகத்துக்கு முன்னால் கண்டனப் பேரணி ஒன்றை நடத்தியது.

சுமார் நூறுக்கும் மேற்பட்ட பிக்குகள் இந்தப்பேரணியில் கலந்து கொண்டனர்.

ஐ.நாவுக்கு எதிரான சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு ஐ.நா. அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்திய இவர்கள் அங்கு ஐ.நாவுக்கு எதிராக கோஷமும் எழுப்பினர். பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளை அங்கீகரிப்பது அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை அங்கீகரப்பதாக முடியும் என்றும் அவர்கள் அங்கு தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகளுக்கு ஐ.நா. இராஜதந்திர அந்தஸ்து கொடுக்க முயற்சி செய்வதாக குற்றம்சாட்டி கடந்த வெள்ளிக்கிழமை தேசப்பற்றுள்ள இயக்கம் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் மகஜர் ஒன்றை கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

# ஜனாதிபதியின் மட்டு. விஜயம் கூட்டமைப்பு ஆட்சேபம்

(மட்டக்களப்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரின் இந்த விஜயத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத்திட்டம் அமைப்பதறகு அடிக்கல் நாட்டுவதற்காகவே ஜனாதிபதி அங்கு செல்கிறார்.

தமிழ் மக்களுடைய பிரதேசங்களுக்கு சுனாமி நிவாரணப் பணிகளுக்கு வழங்கப்பட்ட நிதிகள் முழுமையாகக் கிடைக்கவில்லை.

ஆனால் வீட்டுத்திட்டம் என்ற போர்வையில் ஜனாதிபதி தன்னுடைய அரசியல் காய்நகர்த்தலை மேற்கொள்ளவே மட்டக்களப்புக்குச் செனறு வீட்டுத்திட்டத்துக்கு அடிக்கல் நாட்ட முயல்கிறார். அதனை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாடடோம்.

போரின் கொடுமையினால் கடந்த 20 ஆண்டுகாலமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை. போரினை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் ஜனாதிபதி எநவொரு நடவடிகையினையும் மேற்கொள்ளவில்லை.

அவரின் நடவடிக்கைகள் சமாதானத்தின் பார்வையில் அமையவில்லை. இந்நிலையில் மட்டக்களப்புக்கு விஜயம்செய்து தன்னுடைய அரசியல் காய்நகர்த்தலை மேற்கொளளும் முயற்சி தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கையாகவே நாம் கருதுகினறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி தெரிவித்துள்ளார். (04)

# பில்கிளின்டன் ஞாயிறன்று இலங்கைக்கு வருகிறார்

அமெரிக்காவின் முன்னாள ஜனாதிபதிகளான பில்கிளினடன், ஜோர்ச் புஷ் ஆகியோர் எதிர்வரும் 20ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கப்படும் அமெரிக்க தனியார் துறையின நிதியுதவிச் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக முன்னாள் ஜனாதிபதிகளான இவர்கள் செயற்படுகின்றனர்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளின் ஆசிய விஜயம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. இந்தோனேசியா, தாய்லாந்து, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கும் இவர்கள் விஜயம் செய்யவுளளனர்.

ஆழிப் பேரலைகளினால தமது வீடுகளை இழந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவிக்கின்றது. (08)

# குரோஷியநாட்டு பேராசிரியர் இளம்பரிதியுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடன் குரோஷியநாட்டு பேராசிரியர் பி.எஸ்.செரர் நேற்று முனதினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் பி.ப.1.00 மணிக்கு யாழ்மாவட்ட அரசியல்துறை செயலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது பேராசிரியர் செரர் சுனாமி ஆழிபபேரலை அழிவுக்கான உதவிகளை அரசு உரியபடி பகிர்ந தளிக்காது இருப்பதால் உலக நாடுகளின் அமைபபுக்கள் உதவி வழங்குவதை மறுபரிசீலனை செய்வதாக தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி சமகால நிலைமைகள் குறித்துக் கருத்துக்களை அவருடன் பகிர்ந்துகொண்டார். (த-04)

# ஆண்டவரே நீர் எம் குற்றங்களை மனதில் கொண்டிருந்தால் யார்தான் நிலைத்துநிற்க முடியும்

## தவக்காலச் சிந்தனை

திருச்சட்டத்தை நிறைவேற்றவே வந்தேன் என்று கூறும் இயேசு இங்கு அதைச் செய்து காட்டுகின்றார். கொலை செய்யாதே என்னும் பழைய ஏற்பாட்டுச்சட்டம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை சிந்தித்து அதைக் கூர்மைப்படுத்தி சினம் கொள்ளுதல் முறை யன்று என்கிறார். ஏனெனில் கொலை என்பது தனிப்பட்ட செயல்பாடல்ல மாறாக அதற்கு முன்னால் ஏதோ நடந்திருக்க வேண்டும். செய்தித்தாளை எடுத்து வாசிக்கின்ற போது பல கொலைகள் நடைபெறுவதைப் பார்க்க முடிகிறது. முன்விரோதம், நிலத்தகராறு போன்றவை கொலைக்கு இட்டுச் செல்கின்றது. கொலைக் குற்ற வாளிகளில் அநேகம் பேர் திட்டமிட்டு கொலை செய்தவர்களல்ல மாறாக உணர்ச்சிவசப்பட்டு சிந்திக்காமல் செய்தவர்கள். ஆக இதைத்தான் இயேசு குறிப்பிடுகின்றார். ஆனால் நானோ "சினமே கொள்ளாதீர்கள்" என்கிறேன். ஏனெனில் சினமே கொலைக்கு இட்டுச் செல்கிறது. சினம் கொள்ளாமல் அனைவரோடும் நல்லுறவு கொள்ள அழைக்கிறார். தீயவர் அழிந்திட வேண்டுமென்பதல்ல மாறாக அவர்களும் மனம் மாற வேண்டும் என்பதே இறைத்திட்டம்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும் - குறள்

வலம்புரி

# பழையவற்றை நிஜமாக்கும் புதிய கடல்கோள் அனர்த்தம்

கடல்கோள் அனர்த்தம் ஏற்படுத்திய பேரழிவுகள் மத்தியில் மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட அதிசய நிகழ்வுகளும் நடைபெற்றிருக்கின்றமை இறை உணர்வை வலுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அத்தகைய அதிசய சம்பவங்களில் மக்களை மிகவும் கவர்ந்த நிகழ்வாக மட்டக்களப்பில் கடல்கோள் அனர்த்தத்தில் இருந்து அதிசயமாக உயிர்தப்பிய 'பேபி-81' என்ற மூன்று மாதக் குழந்தையின் உரிமை விவகாரம் அமைந்திருந்தது.

கடல்கோள் அனர்த்தத்தில் அகப்பட்ட பிரஸ்தாப மூன்று மாதக்குழந்தை எவ்வாறு உயிர் தப்பியது, அந்தக்குழந்தையை கண்டெடுக்கும் வரை அதனைக்காப்பாற்றியது யார்?- கண்டெடுத்தவருக்கு இந்தக்குழந்தையை காட்டிக்கொடுத்த சக்தி எது என்ற வினாக்களுக்கு சாதாரண வாழ்க்கையில் இருந்து கொண்டு கண்டுபிடிப்பது கடினமாயினும் அந்த மகத்தான சக்தியே இறைவன் அல்லது கடவுள் என்று கூறுகின்றோம்.

இவ்வாறு நாம் கூறினாலும் அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்வார்களா அல்லது அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நாம் நினைப்பது சரியாபோன்ற கேள்விகள் எழுகின்ற போது 'நீ உன்னை புடம் போட்டுக்கொள்' என்ற ஆன்றோரின் தத்துவம் மட்டுமே இப்போதைக்கு கடைப் பிடிக்க வேண்டியது என்பதுடன் அதிசய நிகழ்வுகளை உள்ளீர்த்துக் கொள்ளலாம்.

எனினும் நடக்கின்ற சம்பவங்கள் எமது புராண இதிகாசங்கள் பேசுகின்ற கதைகளுக்கு நிஜவடிவம் கொடுப்பதாக இருக்கின்ற போது அதனை அப்படியே விட்டுவிடுவது அறிவியலைத் தேடும் மனிதனுக்கு அழகாக மாட்டாது.

அவ்வகையில் கடற்கோள் காவுகொண்ட பகுதிகளை சிலப்பதிகாரம் சித்திரித்த போது அதனை கற்பனை என்றும் வெறும் கதைவடிவம் என்றும் நாம் கூறிக்கொண்டதுண்டு. ஆனால் சிலப்பதிகாரம் பேசிய அதேகடல்கோள் அனர்த்தம் நாம் வாழும்காலத்தில் நிஜமாகிவிட்டபோது ஒருகணம் திகைத்துப் போனதும் சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்களை மிகக்கவனமாக ஆய்வு செய்வதும் கட்டாயமாகின்றது.

இதேபோல்தான் மன்னன் சாலமனின் அரண்மனையில் நடந்த நிகழ்வு. இரண்டு தாய் -ஒரு குழந்தை. ஆளுக்குப் பாதியாகக் கொடுங்கள் என்ற மன்னன் சாலமனின் தீர்ப்பு. மன்னா வேண்டாம் என பெற்றதாய் வடிக்கும் கண்ணீர் மன்னன் உண்மை தாயை இனங்கண்டு கொள்ளும் யுத்தி.

இதேபோன்று தான் 'பேபி-81' என்ற குழந்தையின் கதையும். ஆனால் இங்கு ஒரு குழந்தைக்கு உரிமை கோரியவர்கள் இரண்டு தாய்மார்கள் அல்ல. ஒன்பது தாய்மார்கள். அன்று மன்னனின் யுத்தி, இன்று மருத்துவத்தின் உன்னதம். குழந்தைக்குப் பின்னால் அழுது புரண்ட அந்தத் தாய்தான் உண்மைத் தாயென மருத்துவமும் தீர்ப்புத்தருகின்றது.

மன்னன் சாலமனின் அதேகாலப்பகுதி தான் இதுவுமா? அல்லது தாய்மையின் உள்ளத்து அன்பை கடல்கோள் அனர்த்தம் 2004 மீளவும் உலகறியச் செய்துள்ளதா?.

---

பல்கலைக்கழக ஊழியர்களின்

# சம்பள முரண்பாடுகளைத் தீர்த்துவைக்க அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நடவடிக்கை

**அகில இலங்கை பல்கலைக்கழக ஊழியர் சங்கங்களின் சம்மேளனத்தலைவர் லயனல் மல்வத்தகே கடந்த 09ஆம் திகதி பிரதி கல்வியமைச்சர் தினேஸ் குணவர்த்தனவுடன் நடாத்திய பேச்சுக்களின் போது சம்பள முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான நம்பிக்கை தரும் முடிவுகள் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.**

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருந்த பொது வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டார். பதிலாக A12, A13, A14, A15 ஆகியோருக்கு 2004 செப்டெம்பர்-டிசம்பர்வரை வழங்கப்பட்ட இடைக்காலப் படியை தொடர்ந்து வழங்க ஆவண செய்வதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

திஸ்ஸ தேவேந்திர குழுவின் பரிந்துரைகள் கிடைக்கும்வரை இந்த ஏற்பாடு செய்து தரப்படுமெனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். ஆனால் சம்மேளனம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

வேலைநிறுத்தத்தை பின்போடுவதாயின் A4 (a) முதல் A15 வரையான போதனைசாரா ஊழியர் அனைவருக்கும் இத்தகு இடைக்காலப் படி வழஙகப்பட வேண்டுமென சம்மேளனம் கேட்டுக்கொண்டது.

சம்மேளனத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் கடந்த 10ஆம் திகதி இடம்பெற்ற அமைச் சரவைக் கூட்டத்துக்கு இது தொடர்பாக மனு சமர்ப்பித்ததாகவும் இந்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதை உறுதிப்படுத்த அடுத்த அமைச்சரவைக் கூட்டம் வரை காத்திருக்க வேண்டுமென்றும் அமைச்சரவையின் உறுதிப்படுத்தல் பற்றிய செய்தியுடன் சம்மேளனத் தலைவரை சந்திப்பதாகவும் குறிப்பிட்டார். (ப-95)

# படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பல்லப்பைக் கிராமத்தை மீட்டுத்தருக

பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையீடு

(மருதங்கேணி)

**பத்துவருடங்களாக படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள புலோலி தெற்கு பல்லப்பைக் கிராமத்தைப் படையினரிடமிருந்து மீட்டுத் தருமாறு அப்பகுதி மக்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.**

யாழ்.குடாநாடு படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டதையடுத்து 1996ஆம் ஆண்டு மே மாதம்வரை பல்லப்பைக் கிராமம் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டதையடுத்து அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து அயல் கிராமங்களில் வாழ்ந்துவருகின்றனர். அத்துடன் பிரதான வீதியும் தடைசெய்யப்பட்டது. இதனால் அவ்வீதிவழியாக பிரயாணம் செய்யமுடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் அவ் வீதியால் ஆணைவிழுந்தான் மயானத்திற்கு சடலங்களை கொண்டுசென்று தகனம்செய்வதும் தடைசெய்யப்பட்டது. புலோலி மக்கள் சடலங்களை வேறு வீதியால் சுற்றியே சடலங்களைக் கொண்டுசெல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

படையினரின் பாவனையிலுள்ள வீடுகளை விடுவித்துத் தருமாறு பல தடவைகள் பலரிடம் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்தத் தீர்வும் எமக்குக் கிடைக்கவில்லை.

அரசு-புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னாவது எமக்கு வீடுகள் கிடைக்குமென எதிர்பார்த்து இருந்ததாகவும் ஆனால் அவ்வாறு தமது குடியிருப்புக்கள் விடுவிக்கப்படவில்லை எனவும் இதனால் நாம் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து வருவதாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

## புலிக்கொடி ஏற்றுவதற்கு எவ்வித தடையுமில்லை

# மன்னார் மறைமாவட்ட ஆயரின் கூற்றிற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வரவேற்பு

தமிழர்கள் தங்கள் தேசியக் கொடியை ஏற்றுவதில் எந்தவித தவறுமில்லை என மன்னார் ஆயர் இராயப்பு யோசப் அவர்களின் கூற்றினை தமிழர் தேசியக் கூட்டமைப்பு முழு மனதுடன், முழு மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது என கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தமது தேசியக் கொடியை ஏற்றுவதில் எந்தவித தவறும் இல்லை. தமிழ் மக்களின் தேசியக் கொடி விடுதலைப் புலிகளுடையதல்ல. அத்துடன் தமிழர்கள் தமது தேசியக் கொடியை ஏற்றுவது அமைதிக்கு ஊறு செய்வதுமல்ல என்று தெட்டத்தெளிவாக எதுவித ஐயமுமின்றி பேராயர் கூறிய கூற்று பொருள் பொதிந்தவை ஆகும்.

'அறிவுடமைக்கு அழகு துணிவுடமை' என்பார் வள்ளுவர் ஆன்மீகத்திற்கும் அழகு துணிவுடமை ஆகும். பேராயருக்கு உள்ள தூய்மையையும் தெளிவையும் துணிவையும் ஏனையோரும் ஏற்று செயற்படுவார்களாக. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று தொடர்ந்து செல்லும் பாடலூடாக அன்று ஆட்சியில் இருந்த மணிமுடி தாங்கிய மகேந்திர பல்லவ மன்னனுடன் அறவழியில் அவர் முட்டிமோதிய வரலாற்றினை எடுத்துரைக்கின்றது.

அண்ணல் காந்தியை அறவழிப் போராட்டத்திற்கு வழி காட்டியென நாம் வாழ்த்துகின்றோம். ஆனால் 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காந்தியடிகளுக்கே முன்னோடியாக விளங்கியவர் நம் அப்பர். ஆளுடைய அரசர் மாணிக்க வாசகர் அடியொற்றி வந்த நம் ஆளுடைய அடிகளும் 'யாமார்க்கும் குடியல்லோம் யார்க்கும் அஞ்சோம்' என்று 9ஆம் நூற்றாண்டில் எவருக்கும் அடிபணிய மறுத்த வரலாற்றினை எடுத்துக்காட்டுகிறது.

'ஈனர்க்கு எளியோம் அல்லோம்' என்று 7ஆம் நூற்றாண்டில் வாழந்த தமிழ் ஞான சம்பந்தரும், 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆளுடையநம்பி சுந்தரரும் பொய்மையாளரைப் பாடாதீர் புகலூர் புகழ் பாடினேன் என்று கூறிச் சென்றுள்ளதையும் நாம் இங்கு நினைவு கொள்வோமாக.

இப்பெருமக்கள் வழியில் வந்த பாட்டுக்கொரு புலவர் பாரதியும் 'பூமியில் எவர்க்கும் அடிமைசெய்யோம் பரிபூரணனுக்கே அடிபணிவோம்' என்று முழக்கிய முழக்கம் எவர்க்கும் அடிபணியாது விடுதலைவேட்டையோடு யாம்வாழ வேண்டும் என்பதை எடுத்துரைக்கின்றது. சிக்கலில் இருந்து ஒளித்தோடுபவன் ஆன்மீகவாதியாக இருக்கமுடியாது. சிக்கலகளை எதிர்கொள்பவன் தான் உண்மையான ஆன்மீகவாதி.

எனவேதான் ஆன்மீகவாதி ஆயர் இராயப்பு யோசப் அவாகள் காட்டுகின்ற துணிவில் ஆன்மீகவாதிகள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் ஏற்று எம் தமிழினத்தின் அடிமைத் தளையை அறுத்தெறிய ஆக்கச் சிந்தனையோடு துணிவோடு செயற்படுவார்களாக என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

இயற்கை நம் எல்லோரையும் அரைத்துக் கொண்டிருக்கிறது. உங்களுக்குக் கிடைத்த ஒரு துளி இன்பத்தை எண்ணிப்பாருங்கள். இயற்கை தன் வேலையை உங்களைக் கொண்டு முடிக்கிறது. கடைசியில் இறந்ததும் நீங்கள் செடிகள் வரை உரமாகிறீர்கள்! இருந்ததும் இன்பத்தை நாமே சம்பாதித்ததாக நாம் எல்லோரும் நினைக்கிறோம். இப்படிச் சக்கரம் சுழன்று கொண்டே போகிறது.

சுவாமி விவேகானந்தர்

## கல்வி உபகரணம் வழங்கல்

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிப்புற்ற வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 230 மாணவர்களுக்கான புத்தகப்பை மற்றும் கணித உபகரணப்பெட்டி அடங்கலான கற்றல் உபகரணங்களை யாழ்.லயன்ஸ் கழகம் இன்று மேற்படி பாடசாலையில் வைத்து வழங்கவுள்ளது. அத்துடன் யாழ். இந்துக் கல்லூரி மாணவத் தலைவர்களால் அப்பியாசக்கொப்பிகளும் வழங்கப்படவுள்ளதாகத் கழகத் தலைவர் லயன் த.அன்பானந்தன் அறிவித்துள்ளார். (த)

## சொற்பொழிவு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப்பேரவையினால் வெள்ளிக்கிழமை தோறும் நடாத்தப்பட்டுவரும் ஆன்மீகச் சொற்பொழிவு தொடரில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சிரேஷ்ட விரிவுரையாளர் சு.குமாரவேல் 'சுனாமி இறைவனின்செயலா?' என்னும் பொருள்பற்றிய சொற்பொழிவாற்றுவார். இதன் அறிமுக உரையை ஆசிரியர் இரா.ஸ்ரீநடராசா ஆற்றுவார். (ப-35)

# சதொச ஊழியர் பிரச்சினைக்கு அரசு தீர்வுகாண்பதில் சிக்கல்

### அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே

சதொச நிறுவன ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அரசாங்கம் இருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

சதொச நிறுவனம் தொடர்பான 60 வீத உரிமை அரசாங்கத்திடம் இருந்த போதும் அதன் நிர்வாகம் தனியார் துறையிடம் இருப்பதால் ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்ற நிர்வாகத்தினரே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

வரவு செலவுத்திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 ரூபா அதிகரித்த சம்பளத்தை வழங்குமாறுகோரியும் சதொச விற்பனை நிலையங்களை மூடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு நாடளாவியரீதியில் 25 இடங்களில் சதொச நிறுவன ஊழியர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தமது கோரிக்கைகளுக்கு இரண்டு வாரங்களுக்குள் பதில் வழங்கவேண்டும் என்றும் தமது பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகிடைக்காவிட்டால் எதிர்காலத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்க நேரிடும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளார்கள். (க.9)

# கைதிகள் அறுவர் இடமாற்றம்

(பொலநறுவை)

மொனராகலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவைச்சேர்ந்த 6 பேரும் கடந்த செவ்வாய்க்கிழமை பொலனறுவை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயுதங்களுடன் நடமாடிய சமயம் கைதுசெய்கப்பட்ட இவர்கள் பாதுகாப்பின் நிமிர்த்தம் நீதிமன்ற உத்தரவின்பேரில் மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து மொனராகலை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர்.

மொனராகலை சிறையிலிருந்த சமயம் இவர்கள் நான்குபேர் தங்களை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதம் இருந்ததையடுத்து இவர்கள் ஆறுபேரும் பொலனறுவை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர். இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் 2 பேர் ஏற்கனவே அங்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

### 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# 'சதொச' ஊழியர்கள் அடையாள வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம் சதொச நிறுவன ஊழியர்கள் 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மு.ப 10 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை இவ் அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

ஐ.தே.க அரசினால் 2003 ஒக்டோபரில் சதொச நிறுவனத்தின் 40 வீத பங்குகள் தனியாருக்கு விற்கப்பட்டதால் நிறுத்தப்பட்ட சலுகைகள் உடன் வழங்கப்பட வேண்டும். கடந்த வரவுசெலவுத் திட்டத் திற்கமைய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். சதொச நிறுவனத்தை அரசு முழுமையாகப் பொறுப்பேற்கவேண்டும் போன்ற கோரிக்கைகள் உட்பட 5 கோரிக்கைகளை முன்வைத்து ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (த)

# ஆசிய உதைபந்தாட்ட சம்மேளன தலைவர் வருகை

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தின் முக்கிய பிரமுகரும் ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உப தலைவருமான மணிலால் பெர்ணாண்டோ நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

நேற்று மாலை 5 மணிக்கு யாழ்பரியோவான் கல்லூரியில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட பிரமுகர்களை சந்தித்து கலந்துரையாடல் ஒன்று நடத்தினார்.

இக் கலந்துரையாடலில் யாழ்.பரியோவான் கல்லூரியின் அதிபர் எஸ்.தனபால, யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன், யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ்.கிளிபேட் அன்ரனிப்பிள்ளை, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ற.வேதாரணம் மற்றும் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட கழகங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணியில் இரண்டு தமிழ் வீரர்களை உள்வாங்கவுள்ளோம் சிறந்த வீரர்களை தெரிவு செய்வதற்கான பயிற்சி முகாம் ஒன்றை நாம் இங்கு நடத்தவுள்ளோம்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் இரண்டு மைதானங்களை புனரமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

புனரமைக்கப்படவுள்ள 2 மைதானங்களை தெரிவுசெய்து அறியத்தரும்படி அவர் கேட்டுக்கொண்டார். இதேவேளை சுனாமி அனர்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மணற்காடு பகுதிகளுக்கு இன்று சென்று பார்வையிடவுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில வீடுகளை அமைத்துக்கொடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் 21 ஆம் திகதி அவர் வன்னிக்கும் செல்லவுள்ளார்.(த-19)

## பொது அமைப்புகள்...

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், முன்னாள் எம்.பி. அரியநாயகம் சந்திரநேரு உள்ளிட்ட ஆறுபேர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் அரசாங்கம் காட்டிவரும் பாரபட்சத்தைக் கண்டித்தும் கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

நேற்றுக் காலை 11 மணிக்கு யாழ். மாவட்ட செயலகம் முன்பாக பேரணி ஆரம்பமானது. அங்கு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷிடம் மகஜர் கையளித்ததைத் தொடர்ந்து கண்டி வீதியூடாக கோவில்வீதியைச் சென்றடைந்து பின் கோவில் வீதியூடாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தை பேரணி வந்தடைந்தது. அங்கு இப் போராட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தனித்தனியே தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரியிடம் கையளித்தனர்.

இப் பேரணியில் மேற்படி அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். (த-19)

## சிறுவர்களைப் படையில்...

சிறுவர்கள் என்று இனங்காணப்படுவர்களை பெற்றோர்களிடம் இணைக்கின்றோம். அவர்களிடம் சேர்க்கின்றோம். அவர்களுக்கான மறுவாழ்வுத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஆகவே, இந்தச் சூழ்நிலையில் சிறுவர்களை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றதாகவோ அல்லது விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக பிடிக்கப்படுவதாகச் சொல்வது முற்றிலும் தவறானது.

யுனிசெவ் அமைப்பினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தரப்பட்ட புள்ளிவிபரங்கள் மிகவும் தவறாக இருக்கின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அதிகமான சிறுவர்கள் கடத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதிலுள்ள தவறுகளை அவர்களுக்கு நாங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

இப்படியான புள்ளிவிபரங்களை வைத்துக்கொண்டு தவறான முடிபுகளை ஐ.நா. அமைப்பு எடுத்துவிடக்கூடாது என்பதற்காக ஆதாரபூர்வமாக விபரங்களை திரட்டி அனுப்பியிருக்கிறோம்.

எமது சிறுவர்களின் எதிர்கால நலனை கருத்தில்கொண்டு எந்த அமைப்புடனும் மனிதாபிமான அடிப்படையில் இணைந்து பணியாற்றத் தயாராக உள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் திருகோணமலையிலிருந்து நேற்று வெருகல் ஊடாக வாகரைக்குச் சென்று அங்கு பலருடனும் சந்திப்புக்களில் ஈடுபட்டுவருகிறனர். (த-04)

## சுனாமி நிவாரண பொருட்களுக்கு...

இது குறித்து மேலும் அறியவருவதாவது, வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட கொள்கலன்கள் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொருட்களுடன் கொழும்புதுறைமுகத்தில் உள்ளன. சமீபத்தில் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொருட்களுக்கு அரசு திடீரென வரிகளை விதித்தமையே இதற்குக் காரணமாகும்.

எத்தகைய முன்னறிவித்தலுமின்றி இவ்வாறு வரிகளும், வேறு கட்டணங்களும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டதால், அவற்றை தருவித்த அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளன. அவற்றிற்கான வரிப்பணத்தை செலுத்துவதில் அவை பலத்த சிரமங்களை எதிர்கொள்ளும் அதேவேளை, தொடரும் ஒவ்வொருநாளும் பராமரிப்புச் செலவென கட்டவேண்டிய பணத்தொகையும் அதிகரித்துச் செல்வதால் அவற்றிற்கு உரிமைகோருவதில் இருந்து தம்மை விலக்கிவருகின்றன.

உடுபுடைவைகள், சக்கரநாற்காலிகள், ஊன்றுகோல்கள், படுக்கையணிகள், போர்வைகள் போன்ற அத்தியாவசிய பொருட்களே இவ்வாறு தீர்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இவற்றை தருவித்தவர்கள் அவற்றிற்கான உரிமையைகோர மறுக்கும் பட்சத்தில் அரசு அப்பொருட்களை தனியாருக்கு ஏலத்திற்கு விடுவதே வழமையான நடைமுறையாகும். இவ்வாறே இப்பொருட்களும் ஏலத்தில் தனியாருக்கு விரைவில் விற்கப்படலாம் என்றும், ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு என சர்வதேச மக்களால் கருணையுடன் அனுப்பப்பட்ட இப்பொருட்கள் அரசின் கருணையற்ற போக்கால் அம்மக்களுக்கு கிடைக்காமல், பணமாக்கப்பட்டு அரச திறைசேரியில் முடக்கப்படுவது குறித்து தான் வெட்கமும், வேதனையும் அடைவதாக அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதியொருவர் தெரிவித்துள்ளார். (த-04)

## ஐ.நா....

புலிகளைத் தடைசெய்துள்ளதாகவும் இலங்கை அரசாங்கம் ஐ.நா. செயலருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான பயங்கரவாத அமைப்பின் பிரதிநிதி ஒருவர் கொல்லசெய்யப்பட்டமை தொடர்பில் உலகில் மிக முக்கிய பதவி வகிக்கும் ஐ.நா. செயலர் கண்டனம் வெளியிட்டமை குறித்து தாம் அதிருப்தி அடைந்திருப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலர்கள் எவரும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் படுகொலை தொடர்பில் கண்டனம் வெளியிடவில்லை என்றும் இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. (த-04)

## கனடாவில்...

தெரிவித்துள்ளார். 2001 செப்டம்பரில் அமெரிக்காவில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் பின் கனடாவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் இதுவரை 35 அமைப்புக்கள் பயங்கரவாத அமைப்புக்களாக பல்வேறு கட்டங்களாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், விடுதலைப்புலிகள் தடைசெய்யப்பட்ட அமைப்பாக கனடாவில் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இதேவேளை 2002 இல் அமுலுக்கு வந்த கனடிய பயங்கரவாதச் சட்டத்தை அதன் அமுல்காலமான 3 வருடங்களுக்கு பின்னரும் அவ்வாறே தொடர்வது குறித்த மீளாய்வுகள் பல மட்டங்களிலும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (த-04)

## விமானப்...

பொருட்களை அடித்து நொறுக்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்த கல்கிசை பொலிஸார் சம்பந்தப்பட்ட நான்கு படையினரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்ததை அடுத்து அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய படையினரைத் தேடிப் பொலிஸார் வலைவிரித்துள்ளனர். (த-04)

## புலித்தேவனுடன்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளை குழம்பும் விதமாக கிழக்கு மாகாணத்தில் நடாத்தப்படும் தாக்குதல்கள் குறித்து இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சந்திப்புக் குறித்து உத்தியோகபூர்வ அறிவுறுத்தல்கள் எவையும் வெளியிடப்படவில்லை. (த-04)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.